ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி-அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தியூ ஆவணிமீ 7உ (23—8—1931) | மலர் 17

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் கடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய திலகம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காலரோகிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனே மாத்திரை பாட்டில் அணு 8. கல்தாரி மாத்திரை பாட்டில் அணு 8. கட்டுவாதி மாத்திரை அணு 8. காரமாத்திரை அணு 8. சுகபேதி மாத்திரை அணு 8. கரப்பான எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சிராப்பள்ளி

ராஜா முத்தையா
நூலக அறக்கட்டளை

வேளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ 31த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ஆண்டு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் தெளிவியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவல்லிக்கேணி) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சளி, இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, தொண்டைவலி, கரகரப்பு, கண்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் கீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்துமா மெனடோஸ் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியபடியால் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹாலஸ்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செங்கல்பட்டை, சௌத். ஆர். ரை.

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.

K. S. மேதர & Co., 234, சைனுபஜார் ரோட் மதராஸ்.

வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது

ஒரு முறை பரீட்சியுங்கள்.

புட்டி 1க்கு ரூ. 1—0—0

டஜன் 1க்கு ரூ. 10—0—0

ஏஜண்டுகள் தேவை

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி.பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழனி S.I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்

மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூர்த்து)

சி. சுவாமி சிவதேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாட்சாலே சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தேன் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை.

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அநேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவு விருத்தவுரை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். மூன், பின், ஜெனனம், முடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன சிலவு, கடவுள் ஆராதனை சங்கை வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களிலுமும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6, 7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

இனித இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது

R. K. பழனிவ்வாமிகள்

இன்டியன் சக்தி முக்தி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதனையேற்பட்ட காலத்தில், டைரக்ஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே நற்குணமளித்து, ஆபத்ரக்ஷகனைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பங்களிலும் பல ஆயில், மில்கள், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களிடமும, மிஷின்கள் ஓட்டுமிடங்களிலும், நாளுவித ஆயுதங்கள் புழங்கும் கிடங்கு, பட்டரை, ஒர்க்ஷாப், முதலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளிடம் பழகுபவர்களிடமும், காடுகரை, தோட்டம், மலை, மரம், மண், கவலோக சஞ்சாரத்தினுதவுபரசக்தனிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களிடமும், முக்கியமாய் இத்தைலமிருக்குமானால்; உலகத்தில் பம்பரம்போல் சுழன்றாடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளின் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கன்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது மிகவும் உறுதி. இதின் முழு விபரங்களைப்பற்றி நமது கேட்லாக் மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம். கேட்லாக் இனம்.

1 அவுன்ஸ் சக்தி முக்தி ஆயில் விலை ரூ. 2—0—0

1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,

மனிதை அண்டு ஷாப் வியாபாரம்,

(தாரையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

பொதுவுடைமையும் மதமும்.

(இனி வெளிவரும் "பொதுவுடைமை விளக்கம்" என்னும் நூலின் ஓர் அத்தியாயம்)

(தோழர் ம. சிங்காரவேலு)

சகலமதங்களும் கற்பனைகள் என்ற முடிவு, மெய்ஞ்ஞான முடிவென்றே கூறலாம். மதங்களுக்கு ஆதாரமாக வைத்திருக்கும் கடவுளரும், தெய்வங்களும், கற்பனைகளே. இதனை வாதிப்பதில் பிரயோஜனமில்லை. பக்திகெட்டி—மூத்தி நெறியில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு, இது விளங்காது. விசாரணையில்தான், மதங்கள் கற்பனைகளென்ற ஏற்படும். அதுவரையில் மதங்கள் உண்மையெனவே, சாமான்யமக்கள் நம்பிவருவார்கள். பொய் நம்பிக்கையை போக்குவது எளிதில் சாத்திய மாகாது. தொண்றுதொட்டு பலஆண்டுகளாகசிறுவயதிலிருந்து பழக்கச்சொல்லாகவந்திருக்கும் மூட நம்பிக்கைகள் பலவுள. அவ்வித மூடநம்பிக்கைகளில் முக்கியமானது, கடவுளர், தெய்வங்களென்ற வார்த்தைகள். இந்த சொற்கள், கற்பனைகளென்று யாவரும் உணர, பல காலமாகும். மெய்ஞானம் (Seience) பாமர ஜனங்களுக்குள்ளும், தொழிலாளர்களுக்குள்ளும், பரவப்பரவத் தான் மதங்களின் கற்பனை வெளிப்படும்.

பொதுவுடைமை சம்பந்தப்பட்டவரையில் மதங்கள் யாவும் அதற்கு அதிதப்பட்டவைகளே. (அப்புறப்பட்டவைகளே) சமுதாயத்திற்கும் மதங்களுக்கும், ஒற்றுமையோ. அல்லது அனுசரிப்போ, யாவும் கிடையாது. ஏனெனில், ஆதி முதல் மதங்கள் யாவும் இவ்வுலக வாழ்க்கையை இகழ்ந்தும் கற்பனை வார்த்தையாகிய அவ்வுலக (மேல் உலக) வாழ்வென்றதை புகழ்ந்தும் வந்திருக்கின்றன. பணக்காரர்கள் சார்பாகவே மதங்கள் பேசும்படி உபயோகப்பட்டும் வந்திருக்கின்றன. எந்த சண்டையிலும் இரண்டுகேட்டுக்காரர்களும் தங்கள் தங்கள் கடவுளரை உதவி செய்யும்படி பிரார்த்தித்து வருகின்றனர். இதுவரையிலான மூடத்தனத்திற்கு மதங்களே காரணமாயிருந்துவருகின்றன. கடவுளரும் தங்களுக்குள், சண்டை போட்டுக்கொள்வதாகவும் பல புராணங்கள் கூறுகின்றன! நடைமுறையில் வழங்கிவரும் மதக்கிரிடைகளும் கோட்பாடுகளும் எளியோரை மூட பக்தியிலேயே அழுத்தி வருகின்றன. இதுவுமன்றி, மதங்கள் யாவும், மெய்ஞானம் அடைவதற்கு முட்டுக்கட்டைகளாகவே இருக்கின்றன. மதகுருமார்களும், மௌலானாக்களும், புரோகிதர்களும், பல கிரியை சரிகைகளை எளியோர் மேல் வீசி சமத்தி, தூபதீபமென்றும், அர்ச்சனையென்றும், தீர்த்தமென்றும், திருவிழாவென்றும், இன்னும் பல வினோயாடல்களைக்காட்டி, பல கோடி மனிதரை தெளிவு அடைய விடாமற் செய்து வருகின்றனர். எந்தக்காலத்திலும். எளியோர் இவ்வுலகில் சுகித்து வாழும் வழிகளை மதங்கள் ஆதரிப்பதில்லை. எளியோர்வுழைப்பின் பயனை கொள்ளை கொண்டு போகும் வலியோரை, மதங்கள் ஆதரிக்கின்றன. பிரபுக்கள், இன்னும் மகாபிரபுக்களாகவும். ஏழைகள் இன்னும்ஏழைளாகவும் மதங்கள் கருவிகளாகயிருந்து வருகின்றனவே யொழிய, பொதுஜனங்கள்போதுமான வரை உண்டு உடுத்தி இனிது வாழச்செய்வதில்லை. எந்தக்காலத்திலும், மதங்கள் தனவந்தர்களுக்கே சாயமாப் இருந்து வருகின்றன. சாமான்ய மனிதரை கோடிகையார்த்தமாகவாழ்நாளைக் கடக்க, மதங்கள் செய்கின்றன. துன்பம் நிறைந்துள்ள இவ்வுலகில் சுகித்து வாழச் செய்வதில்லை. மூடபக்தியை அதிகரித்து வருகின்றன. தெளிவு அடைய விடுவதேயில்லை.

மதங்களின் பிரயோசனமின்மை ஒருபக்கமிருக்க, உலகில் மனிதர் படும்துன்பங்களை அவை அதிகரிக்கச் செய்துக் கொண்டேவருகின்றன. மதங்கள்தோன்றியதுமுதல்மதப்பித்தால் நடந்த யுத்தங்கள் எத்தனை! அடக்குமுறைகள்எத்தனை! கொலைகள் எத்தனை! கொடுரச் செய்கைகள் எத்தனை! பலிகள் எத்தனை! காவுகள் எத்தனை! இத்தியாதிக்கொடுரங்களைக்கிட முடியுமோ!! 60000 சமணர்களை கழுவில் ஏற்றியதும் மதமே! கிறிஸ்துவமதப்போர்களில் கோடி, கோடி மாந்தரைமாளவைத்ததும் மதமே!! மகமதிய மார்க்கத்தைப் பரவச் செய்வதில் அதிகமாக உயிரிழக்கச் செய்ததும் மதமே!!! இன்றைக்கும் இந்துக்களையும், மகமதியர்களையும் சண்டை செய்து மண்டை வுடைத்துக்கொள்ளச் செய்வதும் மதங்களே!!!! சுருங்கவுரைக்கில் மதங்களால் உலகில் வதைப்பட்டு மாண்ட மாந்தர் கோடி, கோடி, கோடான கோடியே!!!!!

மதங்களால் உண்டாகும் பொருளாதார நஷ்டங்களுக்கு அளவே கிடையா. கோவில்கள் எத்தனை! விக்கிரகங்கள் எத்தனை! தேர்கள் எத்தனை! தெப்பங்கள் எத்தனை! கோவில்களில் உழைப்பின்றி வாழும் சிப்பந்திகள் எத்தனை! தாசி, வேசிகள் எத்தனை! இவ்வளவு செலவழும் யாருக்குமே நற்பிரயோசனமின்றிப் போவதைக் கவனித்தால், தொழிலாளர், கிருஷிகள் உழைப்பின் பயன் எவ்வளவு வியர்த்தத்தில் செலவாகின்றதென்பது விளங்குமன்றே!

இவ்விதமாக வீணே நஷ்டமாகும் செல்வத்தைக்கொண்டு எத்தனை சுகாதார வீடுகளைக் கட்டலாம்? எத்தனை ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியைக் கொடுக்கலாம்? எத்தனை நந்தவனங்கள், புல்தகசாலைகள், காட்சிசாலைகள் உண்டாக்கலாம்? நோயாளிகளுக்கு எத்தனை வசதிகள் ஏற்படுத்தலாம்? பாழடைந்து கிடக்கும் எத்தனை கிராமங்களை சுகவாழ்வுக்கு இருப்பிடமாக்கலாம்? படிக்கத்தெரியாத தொழிலாளர், கிருஷிகளுக்கு எத்தனை கலாசாலைகள் நிறுவிக்கலாம்? எத்தனை விஞ்ஞான ஆலயங்கள், எத்தனை ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் உண்டுபண்ணலாம்? பயனற்ற அர்ச்சனைகளுக்கும், உற்சவங்களுக்கும் செலவாகும் பணத்தைக் கொண்டு நிலமில்லாதவர்க்கு நிலங்களை வேண்டியவரை செய்யலாமே! நீரில்லாவூரில் நீர்வளப்பங்களை உண்டாக்கலாமே! உலகத்தோரை ஒரு கேள்வி கேட்கின்றோம். இவ்வுலகில் சரியாக உண்டு, வுடுத்தவழியின்றி கோடானகோடிமாந்தர் வதைகின்றார்கள் என்று சொல்லுகின்றீர். உலகவாழ்வுக்கு வேண்டிய ஞானமின்றி இன்னும் பல கோடி மக்கள் அறிபாமையில் கிடந்து உழல்வதாகவும் கூறுகின்றீர். மனிதகுலம் இவ்வித சீர்கேட்டில் கிடந்து பல்லாயிரம் ஆண்டுகளாக வுழலுங்காலை இறந்த பிறகு, எதோ சுவர்கலோகமென கோயில்களையும், குருமார்களையும் நிருமித்து வருகின்றீர்களே. இது என்ன மடமை? இவ்வுலக வாழ்விற்கு கோயில்களும், குருமார்களும் உபயோகமில்லையெனில், என் இவை விஷயமாக இவ்வளவு வியர்த்த செலவும், பிரயாசையும்?

மதங்கள் இதற்று விடையளுக்கு வழி காட்டிகளாக இருத்தல் பாதகமில்லை யெனினும், இவ்வுலக வாழ்க்கைக்கு அவை தெடுதிகளை விளைவித்துக்கொண்டேவருகின்றன. "அவன் அன்றி ஓர் அணுவும் அசையா" தென்னும் கற்பனை வசனத்தால் மனிதனுடைய முயற்சியும், முன்னேற்றமும், விசாரணையும் தடை பெறுகின்றன. மதக் கற்பனைகளாகிய தெய்வங்களும், பேய், பிசாசுகளும், இருளன், வீரன், காட்டேரி முதலிய சொற்களும் மனிதரை சதா பயத்திலேயே வைத்து வருகின்றன. இருளைக் கண்டு பயப்படுவோர் எத்தனைபெயர்! சுடுகாட்டைக்கண்டு திகிலடைவோர் எத்தனை பெயர்! மந்திர தந்திரங்களால் மதிமயங்குவோர் எத்தனை பெயர்! இத்தியாதி கற்பனைகளுக்கு மதங்களே ஆதாரமாயிருந்து வருகின்றன.

இதுவுமன்றி, மனிதனையும், கால்நடைகளையும் வாட்டிவரும் நோய்களின் காரணங்களையும், அவைகளின் பரிகாரங்களையும் தேடவிடாமல்மாரி அம்மனையும், முனீஸ்வரன்களையும் சிருஷ்டித்துக்கொண்டு மனிதர்களைப்படுகுழியில் தள்ளிக்கொண்டு வருகின்றன நமது பல மதங்கள். வாந்திபேதி, பித்தசுரம், அம்மை, லைசூரி மகாமாரி முதலிய கொடிய வியாதிகளால் நமது இந்தியாவில் மாளுவோர் கோடான கோடி. இந்த நோய்களின் காரணங்களை மெய்ஞானிகள் கண்டு பிடித்து, அவைகளுக்குத் தகுந்த சிகிச்சைகள் செய்டச் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தியாநாட்டிலோ தெய்வங்களாலும் பில்லி, சூன்யாதிகளாலும் அந்நோய்கள் உண்டாகின்றனவென, மதக்குருக்கள் கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டதால் அவைகளம்பி கோடிக்கணக்கான இந்தியர் கொடும் நோய்களால் மாள்கின்றனர். மதங்கள் உண்மையாயின் என் இந்த க்ரோ வாதனைகளை நிறுத்தலாகாது? இவைகளை கம்பி மோசம் போவதும் விவேகமாகுமா? இந்த மதியீனத்தை எதித்துக்காட்டாத தலைவர்களும் யோக்கியமுடையவர்களாவர்களா? அல்லது சிறந்த பெரியோர்களெனப்படுவார்களா? இதன் விஷயமாக இந்திய நாட்டுத் தலைவர்கள் மௌனம் சாதித்து வருவது பாமர மக்களை வஞ்சித்ததாகாதா?

மதங்களில் உழல்கின்றவர் சோதிடத்திலும், சாதகத்திலும் அதிக நம்பிக்கைவைத்துள்ளார். "சத்தமும் சோதிடமும் என்றும் இலை பிதற்றும் பித்தரில் பேதையாரில்" என்ற முதுமொழியை உணர்ந்தாரில்லை! ஞானசம்பந்தர் ஞானம் சற்று பாமர ஜனங்களுக்கு ப்பரவுமேயகில் நாளும், லக்கணமும் தொழிந்துவிடும். அவைகளால் உண்டாகும் பயமும் நீங்கும்.

சமுதாய நிலையில் மதங்களின் கதி என்னவென்று கேட்கலாம். விசாரணையில் மதங்கள் முற்றிலும் மனை ஆலயங்களாக முடிகின்றபடியாலும், மதங்கள் சார்பாகச் செய்யும் சாந்தியும், கிரியையும், கர்மங்களும் பயனற்ற காரியங்களாய முடிவதோடு மனிதரைப் பல கொடுமைகளுக்கு ஆளாக்குவதாலும், மதங்களில் மூடநம்பிக்கை வைக்க வைக்க மெய்ஞான அறிவு வளர்வதற்கு இடமில்லையாதலாலும், இந்தியாதி கேடுகளுக்கு ஆதிகாரணமாய் இருந்துவரும மதங்களை வேரற வொழித்தலே அவசியமென ஏற்படும். தற்கால உயர்வு தாழ்வுள்ள பொருளாதார

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

வரும் சுயராஜ்யம் இராமராஜ்யமாக விருக்குமாம். அந்த இராமராஜ்யந்தான் கூடாது. ஏன்?

(கைவல்யம்)

"நமக்குசுயராஜியம் கிடைத்தால் ராமராஜியமாக்கிவிடலாம். நமக்குக்கிடைக்கும் சுயராஜியம் ராமராஜியமாகவிருக்கும்" என்று மகாத்மா காந்தி சொல்லுகிறார். நீதியும் நியாயமும் உடையதாய் சமத்துவம் நிறைந்த சுயராஜியம் நிலைக்குமே யொழிய வேறு எந்த ராமராஜியமும் நிலைக்காதென்பதை மகாத்மா காந்தியும் அறிவார்.

இராமர் விஷ்ணுவின் அவதாரம். தசரதச்சக்கரவர்த்திக்கு மகன். அயோத்திக்கு இராஜா. மனிதனுக்காக நடந்து காட்டவந்தவர். அவரால் நடத்திக்காட்டப்பட்ட ராமராஜியம் நமக்கு வேண்டுமென்ற மகாத்மா சொல்லுவாரானால் அது நியாயமும், அவசியமும் அல்லவென்றே 'குடி அரசு' சொல்லுகிறது. சொல்லுக் காரணங்களை ஆலோசித்துப்பார்த்து 'குடி அர'சை குற்றம் சொல்லுங்கள்.

விஷ்ணு அவதாரம் செய்து தசரதன் வயத்தில் பிறந்து அயோத்தியை அரசாண்டார். அவர் பெயர் இராமர் என்பதற்கு ஆதாரமென்ன? எதனால் தெரிகிறோம்? இராமாயணத்தால். இராமாயணத்தால் தெரிகிற ராமராஜியமானால் அந்த ராமராஜியத்தில் நீதியும் ஒழுங்குமிருக்காதென்று சொல்லுவதை ஆலோசித்துப்பார்ப்போம்.

விஷ்ணுவின் மகன் பிர்மா. அவரின் பேரப்பிள்ளையான இராவணனுக்குத்தலை பத்து. அவன் தம்பி கும்பகர்ணனின் ஒரு தோள் பதினாயிரம் யோசனை. அப்படியே மற்றதோளும். அப்பொழுது அவனின் மார்பின் நீளம் இருபதாயிரம் யோசனை தூரமாகிறது. அதாவது பூமியின் குறுக்களவைவிடப்பலமடங்குபெரியது. அந்த கும்பகர்ணன் பூமியின் ஒரு சிறுபாகமான இலங்கையிலிருந்தான். அவனும், பார்வதி பரமேஸ்வரன் இருவரும் குரங்காய்க் கூடின சுக்கிலம் ஆஞ்சனாதேவி என்னப்பட்ட ராக்ஷதப்பெண் வயற்றில் பிறந்து உண்டான அனுமானும், இமயமலையின் அடிவாரத்திலிருந்த பர்வதத்தின் தடாகத்தில் குளித்த ஆறு பெண்குரங்கான விந்தையை அடைந்து அந்தபெண் குரங்கை தேவேந்திரன் மோகித்து விடுத்த சுக்கிலம் பெண் குரங்கின் வாயில் பட்டுப்பிறந்த வாலியும், அந்தப்பெண் குரங்கையே சூரியன் கண்டு மோகித்துச் சுக்கிலம் ஒழுக ஒழுகின சுக்கிலம் அந்தப்பெண் குரங்கின் மார்பில்படுப்பிறந்த சுக்கிரீவனும், தேவேந்திர உலகத்திற்கும் பூலோகத்திற்குமுள்ள தூரம் தெரியாவிட்டாலும் சூரியனுக்கும், இமயமலைக்குமுள்ள தூரம் பலகோடியென்பது உங்களுக்குத்தெரியும். அவ்வளவு தூரமிருந்தும் சுக்கிலம் புறப்பட்டு குறிதவராமல் வந்து அந்தக்குரங்கைக்கண்டுபிடித்த ஆச்சரியகரமும் குரங்கு, ராக்ஷதன், அறுபதினாயிரம் பெண்ஜாதிகளுடன் வாழ்ந்த இராஜாவின் மகன், விஷ்ணுவின் அவதாரம் இவ்வளவு ஆதாரங்களோடும் கொண்டது ராமராஜியம். அவ்விதராமராஜியம் இருந்தது உண்மையா? பொய்யா? என்பதை புத்தியும் படிப்புமிருந்தாலும் பாசாங்குக்காரனிடம்தர்க்கத்திற்கு நாம் போகவேண்டியதில்லை. குரங்கு, ராக்ஷதன், தேவன் முதலியவர்களின் ஆதாரத்தால் உண்டான ராமராஜ்யம் நமக்கு உபயோகப்படுமா? அதுவுமல்லாமல் பலலக்ஷ வருஷங்களுக்கு முன் நடந்த ராமராஜியம், ராஜாவே வேண்டாமென்கிற இந்தக்காலத்திற்கு உபயோகப்படுமா? என்கிற நியாயங்களாலேயே ஆலோசித்துப்பார்க்காமலே தள்ளி விடலாம். என்றாலும், மகாத்மா காந்தி சொல்லுகிறார். காங்கிரஸ்தலைவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். பார்ப்பனர்களெல்லாம் பலே போடுகிறார்கள். ஆனதால்அதை ஆலோசித்துப்பார்ப்போம்.

இராமர் அவதாரம் செய்த ராமராஜியம் நடத்தினதற்கு வைணவக்கிரமமாகவும், சைவக்கிரமமாகவும் இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அந்த இரண்டு காரணங்களும், நியாயத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஒவ்வாத அசாதாரணங்களாகவிருக்கின்றன. இராமர் அவதாரம் செய்ததற்கு வைணவ புராணம் சொல்லும் காரணமாவது; வைகுண்டத்தில் விஷ்ணுவும், இலக்ஷ்மியும் தங்கள் மாளிகையின் பள்ளியறையில் ஏகாந்தமாகவிருந்தார்கள். அப்பொழுது பிர்மாவின் பிள்ளைகளான சனகாதி மகரிஷிகள் அங்கேபோய் விஷ்ணுவை விசாரித்தார்கள். பள்ளியறையில் படுத்திருப்பதாக விஜயன், ஜெயன் என்கிற காவற்காரர்கள் சொன்னார்கள். உடனே சனகாதிரிஷிகள் பள்ளியறைக்குள் போகப்புறப்பட்டார்கள். காவற்காரர்கள் தடுத்தார்கள். உடனே ரிஷிகளான பிராமணர்களுக்குக்கோபம் வந்து "நீங்களிருவரும் ராக்ஷதர்களாகப்போகக்கடவது" என்று சாபம் கொடுத்தார்கள். இதைத்தெரிந்து விஷ்ணுவந்து சனகாதிகளிடம் மன்னிப்பு கேட்டு "அயோக்கியத்தனமான வேலையாட்களை வைத்துக்கொண்டது என் குற்றமேயொழிய அவர்கள் குற்றமன்று" என்கிற வார்த்தைகளால் அவர்கள் கோபத்தைத்தணித்து காவற்காரர்களைப் பார்த்து 'நீங்கள்செய்தகுற்றத்தால் ஏற்பட்டசாபத்தை அனுபவித்தேதீரவேண்டும். எனெனில் பிராமணர்களின் சாபத்தைத்தடுப்பது என்னாலுங்கூட முடியாத காரியமாகும். ஆனதால் நீங்கள் பூலோகத்தில்போய் ராக்ஷதர்களாய்த்தோன்றுங்கள். நான்வந்து சம்மாரம் செய்து உங்களை அழைத்துக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார். அப்படியே அவர்கள் ராக்ஷதர்களாகப்பிறந்ததாகவும், விஷ்ணு ராமராக அவதாரம் செய்ததாகவும், வைணவர்களின் விஷ்ணு புராண சித்தாந்தம் சொல்லுகிறது.

சைவபுராண சித்தாந்தமாவது:— அதிக பலவானான விருத்திரா சுரனென்று ஒருவனிருந்தான். அவன் பெண்சாதி விருதையென்கிற பெண்ணிடம் மகாவிஷ்ணு ஆசைகொண்டிருந்தார். புருஷனுடைய பராக்கிரமத்தாலும், விருதையின் பதிவிரதாதன்மையாலும், விஷ்ணு தன் ஆசையைநிறைவேற்றிகொள்ள முடியவில்லை. சிலகாலம் பொறுத்து விருத்திராசுரன் சிவபெருமானிடம் யுத்தம் செய்து சிவபெருமானால் கொல்லப்பட்டான். அதைத்தெரிந்தவிஷ்ணு இறந்துபோன விருத்திராசுரனுடைய உடலில் பிரவேசித்து சூரனைப்போல நடித்து விருதையுடன் கூடி விருந்தார். அதைத்தெரிந்த விருதை கோபம்கொண்டு "ஏ, விஷ்ணுவே நீ செய்த பாதகச்செயலுக்காக பூலோகத்தில் மனிதனாகப்பிறந்து உன்னுடைய பெண்ஜாதியை என்னுடைய ஜாதியான் அபகரித்துப்போகக்கடவது" என்று சாபம் கொடுத்தாள். அதனிட்ட சாபப்பிரகாரம் 'விஷ்ணு ராமராகப்பிறந்தார்" என்று சைவர்களின் முக்கிய சித்தாந்தமான கந்த புராணம் சொல்லும். இந்த இரண்டு காரணங்கள் தவிர வேறு முக்கியமான காரணங்கள் இவர்களின் சித்தாந்தங்களிலில்லை. இந்த இரண்டு காரணங்களும் சன்மார்க்க மற்ற அசம்பாவிதங்களென்பது எல்லோருக்கும் விளங்கக்கூடியதேயாகும்.

பிராமணனின் ஆதிக்கம் எங்கும் தங்கு தடையில்லாமல் நிலை நிறுத்திக்கொள்ளுவதற்கு எழுதப்பட்ட தேமுதற்கதையின் இரகசியமாகும். மகாவிஷ்ணுவும் இலக்ஷ்மியும் படுத்திருக்கும் பள்ளியறைக்குள் போன பிராமணர்களைத்தடுத்தக் குற்றத்தால் ஏற்பட்ட சாபத்தைத்தடுக்க விஷ்ணுவாலேயே முடியாமல், அந்த பிராமணர்களை விஷ்ணுவே உபசரித்து, கோபத்தைத்தணித்து, காவற்காரர்களைச்சாபம் ஏற்றுக்கொள்ளும்படியாக உத்திரவுமிட்டு, "பிராமணர்கள் கொடுக்கும் சாபத்தைத்தடுக்க எனக்கும் அதிகாரமில்லை" என்றும் சொல்லிவிட்டார். வைணவ சித்தாந்தப்படி லோகஇரட்சகரான மகாவிஷ்ணுவும் லோக நாயகியான இலட்சுமியும் வைகுண்டத்தில் ஒரு மானிகையின் பள்ளியறையில் அறுபத்து நாழிகையும் ஆடிக்கொண்டிருந்தது உண்மையாகவிருந்தால் அந்த அறைக்குள் போனவர்களைத்தடுப்பது காவற்காரர்களின் வேலையல்லவா? எதற்காக காவற்காரர்களிருக்கிறார்கள்? அந்தக் காவற்காரர்களான விஜயன், ஜெயன் என்னப்பட்டவர்கள் தேவர்களில் விசேடப்பட்டவர்கள். பல நாள் தவசும் பெருமாள் கைங்கரியமும் செய்தவர்கள். அந்தப்புண்ணிய விசேடத்தால் மகாவிஷ்ணுவிற்கு அந்தரங்கக் காவற்காரர்களானார்கள். அவர்கள் தடுத்ததின் காரணங்களை உணராத ரிஷிகள் ஆணவமே பிரதானமாகக் கொண்டு சாபம் கொடுத்தார்களே. இவர்கள் குணமும் யோக்யதையும் நீங்களே அறிந்து கொள்ளுங்கள். இவர்களால் எழுதப்பட்டதென்று சொல்லப்படும் தரும சாஸ்திரத்தின் போக்கும் எவ்விதமிருக்கும் என்பதையும் ஆலோசித்துப்பாருங்கள். தடுத்தாலும் தடுக்காவிட்டாலும் சாதாரணமனிதர்களுடைய வீட்டுக்குள் ளேபோக உத்தரவு வேண்டுமென்கிறது இப்பொழுதிருக்கும இராஜியத்தின் சட்டம். "காவற்காரர்கள் தடுத்தாலும் பார்ப்பனன் பள்ளியறையிலும் நுழையலாம். இல்லாவிட்டால் சாபம் கொடுத்துவிடுவான்" என்பதைத் தெரிந்து நடத்தப்படும் ராமராஜியத்தில் பார்ப்பனனுக்கு உலக போக போக்கியங்களும் மற்றவர்களுக்கு மோக்ஷங்களும் உண்டாகலாம். மத்தியில்வரும் உதையும், அடியும் யாரைச்சாருமோ அதுதான் இனித்தீர்மானமாகவேண்டும்.

ஜனகாதி மகரிஷிகளுக்கு ஒழுக்கம் தெரியாதா? ரிஷிகள் நியாயத்திற்கு விரோதமாகப் போவார்களா? அவர்கள் எல்லாம் தெரிந்த பெரியவர்களல்லவா? என்று உங்கள் மனம் நினைக்கக்கூடும். ஆனால் சமய சித்தாந்த மலையின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு யாருக்கும் அதன் இரகசியம் தெரியாமல் அரசாட்சி செய்யும் அந்தக்கதைக்குக்காரணமென்ன? அது அங்கு என்வந்தது? எதற்காக அங்கே எழுதிவைத்திருக்கிறார்கள்? என்கிற ஆலோசனையும் கூடவே தொடர்ந்துவரும். அப்பொழுது பார்ப்பனன ஆதிக்கம் எல்லாவிடத்திலும் செல்லுவதற்காகவும், செல்லுகையில் மற்றவர்கள் தடுக்காமலிருக்கவும், தடுக்கப்பயப்பட்டிருக்கவும் ஏற்படுத்தின கதைஎன்பதையும் தெரிந்துகொள்ளுவீர்கள்.

இராமாயண உற்பத்திக்குக் காரணமான கதையால் பார்ப்பனனுக்கு எற்பட்ட ஆதிக்கங்கள் அனந்தம். அதையெல்லாம் இதிலே சொல்ல இடமில்லை. மிட்டா மிராஸ், பண்ணை முதலிய பெரிய மனிதர்கள் வீட்டிற்கு வரும் பட்டா, பணக்காரன் பண்ணாடி முதலிய விருந்தாளிகளுக்கு சமைக்கும் சாப்பாட்டை ருசிக்கு பிச்சைக்கு வரும் பார்ப்பனனும்,

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

காந்தியின் 'ராம' ராஜ்யம்.

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)

கட்டுரை 5.

முன் தொடர்ச்சி.

இப்பொழுது நாம், பெருமை வாய்ந்ததாகக் கூறப்படும், "சாத்மீகம்", அல்லது "பலாத்காரமின்மை" யென்பதைப் பற்றி ஆராய்வோம். ஆப்கானிஸ்தானம் அல்லது துருக்கியிலிருந்து வந்த முகமதிபர்களாலும், அல்லது ஐரோப்டாவிலிருந்து வந்த கிறிஸ்துவர்களாலுமாகிய அன்னிய தேசத்தினரால் நாம் ஆளப்படுவதை சந்தோஷமாகவும், திருப்திகரமாகவும் அங்கீகரித்து ஒத்துக்கொள்ளுவதாயிருக்கும் பக்ஷத்திலும், நமது இந்தியாவானது வெளிநாட்டுப் படையெடுப்புகளினின்றும், கொள்ளைகளினின்றும், உள்நாட்டுக் கலகங்களினின்றும் காப்பாற்றப் படுவதற்காக நாம் அந்த அன்னியர்களையே நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும், பெருமை வாய்ந்ததாகக் கூறப்பட்டு வரும் பலாத்காரமின்மையென்னும் "அஹிம்சா" தத்துவமானது வேடிக்கைக்கும், விளையாட்டிற்குமாக ஒரு வித்தையில் அல்லது கலையில் ஈடுபட்டு, பாடுபடுவதையே யொக்குமேயன்றி, வேறில்லை. அல்லது தெய்வீகத் தன்மையுள்ள அருள் அல்லது ஆலோசனை என்றுவது கூறப்படவேண்டும். எப்படியிருந்தபோதிலும்அது கெடுதி செய்யாததும், தீங்கற்றதுமேயாகும். ஆனால், நிலைமையோ இபபொழுது எவ்வளவோ மாறுபாடடைந்திருக்கின்றது. ஆங்கிலேயர்கள் போர் புரிவதில் சமர்த்தர்களாயிருந்த போதிலும் கூட, அவர்கள் இப்பொழுது யுத்தத்தைக் கவனியாது வியாபாரத்தையே பெரிதும் கவனித்து வருகின்றார்கள். எனெனில், இனிமேல் இந்தியாவை ஆட்சி செய்வதில் தங்களுக்கு அதிகப்படியான இலாபமொன்றும் கிடைக்காதெனக்கருதியும், இந்தியாவை விட்டு விலகுவதே நலமெனவும் நினைத்து, அவர்கள் அவ்வாறே மெதுவாக செய்து கொண்டுமே வருகின்றார்கள். ஆகையினால், நமது மக்களை சட்ட விரோதமான கொடுமைகளினின்றும், பலாத்காரங்களினின்றும், அன்னிய படையெடுப்பினின்றும், நம்மிடையேயுள்ள பழி, பாவங்களுக்கஞ்சாமனிதர்களிடத்தினின்றும் காப்பாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் இந்தியாவிலுள்ள நமது வாலிபர்களையேச் சார்ந்ததாகின்றது. ஆனால் இக்காரியங்களிலொன்றையும்புரிவதற்கு அவர்களால் முடியவே முடியாது. எனெனில், அரசாங்க சட்டத்திற்குட்பட்டு அவர்கள் ஆயுதங்களை கொடுக்கவும் செய்யதே தீரவேண்டுமென்பது, ஒவ்வொரு மனிதனுடைய முக்கியக் கடமையென்பதையும் நாம் நன்றாக உணர்ந்துகொள்ளவேண்டும். பகவத் கீதையில் காணும்படியான ஒரு வாக்கியத்தை நாம் எடுத்துக் கொண்ட போதிலும்கூட, அவ்விடத்திலும் பகவானானவர் ஒவ்வொரு யுகத்திலும் நல்லோர்களைக் காப்பாற்றி கொண்டு வந்ததுடனில்லாமல் துஷ்டர்களை நிக்கிரகம் செய்து கொண்டும் வந்தாரென்றே காண்கின்றோம். காந்திஜியால் மக்களுக்குபதேசிக்கப்படும் சாத்மீகக் கொள்கையானது எப்பொழுதும் யுத்தத்தையே தங்களுடையத் தொழிலாக அனுசரித்துக் கொண்டிருப்பவர்களுக்கே தான் பெரிதும் பயன் படக்கூடும். ஏனெனில், அவர்கள் தான் தங்களுடைய யுத்தமுறைமைகளைக் கையாளும் பொழுது, தங்களுடைய யுத்த ஆவேசத்தினால் யுத்த அளவை மீறி அதாவது சமாதானம் அல்லது சாதமீகமென்பதை அறிந்து கொள்ளாமல் நடக்கக்கூடும். ஆனால், சமாதானத்தையே அதிகமாக எப்பொழுதும் விரும்பும் வலிமையற்ற அல்லது சக்தியில்லாத இந்திய மக்களுக்கு, உண்மையான சமாதானமென்பது எப்பொழுதும் யுத்தத்திற்குத் தயாராக யிருப்பதெனவும், எதிரிகளைத் தோற்கடித்து அவர்களை வதைசெய்வதென்றாவெனவும்போதிக்கப்படாதிருப்பதானது எப்பொழுதும் அபாயத்தையேதான் விளைவிக்கும். ஏனெனில், இம்முறைபானது சட்ட திட்டங்களால் நியாயந்தானென ஒப்புக்கொள்ளப் பட்டதையும், ஓர் யுத்தமானது நியாயந்தான் அல்லது தர்மந்தான் என்பதை பலாத்கார உரிமையினால் வற்புறுத்துவதினால் மட்டுந்தான் அனுஷ்டிக்கப் படமுடியும். தாங்கள் எவ்வளவு தூரம் தங்களுடைய சுதந்திரத்திற்காகப் போராட்டத்தயாராயிருக்கின்றார்களோ, அவ்வளவு தூரந்தான் அந்த சுதந்திரத்தை அவர்கள் அடைந்து, சுதந்திரமுள்ள மக்களாக வாழ முடியுமென்பதை நாம் நம் துவாலிபர்களுக்குப் போதித்துக் கொண்டு வாவேண்டும். யுத்த சன்னத்தர்களா யிருப்பதானது அபாயத்தை விளைவிக்கக்கூடிய தாயிருக்கலாம். ஆனால், எப்பொழுதுமே அது அப்படியல்ல. மக்கள் தங்களுடைய தேசத்தைத் தாங்களே தான் எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்றும், அதற்காக ஒவ்வொருவரும் சுதந்திரியர்களாகத் தாண்விளங்க வேண்டுமென்றும் மக்களுக்குப் போதித்து, அவர்களிடையே ஓர்வித உற்சாகத்தை யுண்டாக்குவதானது சாலவும் சிறந்ததும், மேன்மையானதுமான கொள்கையேயாகும். தற்கால நிலைமையில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு குடியும் தங்களுடைய தேசத்தைத் தாங்களே காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அம்முறையில் ஒவ்வொருவரும் சுதந்திரியர்களாகவேதான் இருக தீரவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். ஆகையினால், நவீன யுத்தமுறைகளையும், யுத்ததளவாடங்களையும் நாம் கையாள விரும்பாதவரையிலும், நமக்கு எவ்வளவு தான் ஊக்கமிருந்தபோதிலும்கூட அல்லதுநாம் யுத்தத்திற்குத்தயாராயிருந்தபோதிலும்கூட அவைகளினால் நமக்கு ஒருவித பிரயோஜனமும், லாபமுமில்லை. நாம் தயாராயிருத்தலும், நமது ஊக்கமுமையாவும் வியர்த்தமேயாகும். நவீன யுத்தமுறைமைகளும், யுத்த தளவாடங்களும் சாஸ்திரோக்தமானவைகள். அவைகள் யாவும் எல்லாவித மக்களாலும் அறிந்து கொள்ள முடியாதவைகள். அவைகளை அறிந்து கொள்ள வேண்டுமானால் மக்கள் விஞ்ஞான சாஸ்திரத்தில் மூழ்கினவர்களாயிருக்க வேண்டும். மேலும், தலைமுறையாக அந்த விஞ்ஞான சாஸ்திரத்தையும், அதனோடு கூடியவைகளையும் அறிந்தவர்களாகவுமிருக்கவேண்டும். இப்படிப்பட்டமக்களால் தான் அக்கொள்கைகளை அறிந்து கொள்ள முடியுமேயல்லாமல், மற்ற மக்களால் முடியவே முடியாது. சமாதானமான காலங்களில் உபயோகப் படுத்துவதற்கென்று நிர்ணயிக்கப்பட்டிருந்த எல்லா இயந்திரங்களும், இயந்திர சாலைகளும், யுத்த காலங்களில் தங்களுடைய தொழிலை நிறுத்தி விட்டு, யுத்த தளவாடங்களாகிய துப்பாக்கிகளையும் அவைகளுக்கு வேண்டிய வெடி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

காங்கிரசும் சுயமரியாதையும்.

(கோவை ஆர் கிஸன்.)

நாவலந் தீவென்னும் கர்மிஷ்ட பூமியாகிய நாட்டில் இன்று நண்பரிருவரோ, பன்மரோ சந்திப்பின்மேற்சொன்ன காங்கிரஸ், சுயமரியாதை என்னுமிரு பெருமியக்கங்களைப்பற்றியும் அவைகளின் லக்ஷியங்களைப்பற்றியும், அவைகளினிதுவரை செய்துளவேலைகளைப்பற்றியும், முற்போக்கைப் பற்றியும், அவைகளாலெதிர் பார்க்கக் கூடிய பயனைப்பற்றியும் பேசாதார் அவர்களுள் ஒரு சிலரே யாவார் எனக்கூறின் அது மிகையாகாது. நான் இக்கட்டுரை வாயிலான் ஆராயப்போந்தது இவ்விரு இயக்கங்களுன் எது தலை சிறந்ததும், போற்றக்கூடியதும் பின்பற்றக்கூடியதுமாகு மென்பதேயாகும்.

முதலாவதாக ஓரியக்கத்தின் மேன்மையை, அதன் லக்ஷ்யத்தை யெய்த ஜன சமூக முன்னேற்றத்துக்கேது கரமான வழியில் வருக்கும் திட்டங்களைக்கொண்டும், அவைகளை அமுலுக்குக் கொண்டுவர அதன் தலைவர்களும் தொண்டர்களும் கையாளும் முறைகளைக்கொண்டும் தான் நாம் நிர்ணயிக்கக் கடமைப்பட்டுள்ளோம்; இதையாரும்மறைக்கவோமறுக்கவோ முடியாது. இதனை யாதாரமாகக் கொண்டு இவ்விரு இயக்கங்களையும் சற்றே சீர்தூக்கிப் பார்ப்போம்.

இதை ஆராயப்போந்தது "நம்தேய மக்களின் விடுதலைக்குப் போராடுவதாக மார்தட்டிக்கொள்ளும் இவ்விரு வியக்கங்களும் முதண்படி ஒன்றையொன்று தூற்றி விஷமப்பிரசாரம் செய்தலெற்ற"க்கெனக்கடாவுச் சிலர் முன்வருதலினலென்க.

நம்நாட்டுக்கு விடுதலை வேண்டும், சுதந்திரம் வேண்டுமென்பதில் இரு இயக்கமும் அரும்பாடுபட்டுழைத்து வருகிறதென்பதில் யாருக்கும் ஆக்ஷேபமிருக்கமுடியாது; இதையெழுதுமெடுக்கும் ஆக்ஷேபணையில்லை. ஆனல் நோரும் விடுதலை அல்லது சுதந்திரம் எத்தன்மைத்து என்பதில் தான் இவ்விரு இயக்கங்களும் மாறுபடுகின்றன. என்? அவைகளின் லக்ஷியங்களே மாறுபட்டிருத்தலினுல் தான். அதாவது ஆகுதியின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டுமென்பதில் ஒன்றுபடினும், அவ்வந்தியவாகுதியை விரட்டியடித்தபின் எத்தகைய ஆகுதித்திட்டம் நிறுவ வேண்டுமென்பதிற்றான் அவைகள் மாறுபடுகின்றன.

நந்தாய்நாடு அரசியல், சமூகவியல் பொருளாதாரவியல் ஆகிய முத்துறைகளிலும் மிகப்பிற்போக்கானநிலைமையில் இருக்கிறதென்பதையும், அதற்குக் காரணம் மதத்தினாலும், கடவுளின் பேராலும் அக்கடவுள் அல்லது அக்கடவுளின் அமிசமாகிய தாதரால் அல்லது அவதாரத்தால் சொல்லப்பட்டனவாகச் சொல்லப்படும் அபத்தக்களஞ்சியங்களாம் வேத சாஸ்திர, புராண, இதிகாச, கீதோபதேசங்கள், போற்றிப்பாராட்டும் வருணாச்சிரமம், சனாதன தர்மம், புக்தி யனுபவத்தைத் தொல்லைப் படுக்க வழக்கங்கள் முதலியவற்றைத் தலைதொண்ட மக்கள் பல்வேறு ஜாதியினராகவும், மதத்தினராகவும், மக்களைக் களடிமை கொண்டதன் காரணமாக வேஜாதி சமயப்பூசல் மலிந்து, ஒற்றுமை குலைந்து, வேற்றுமை விளைந்து அவேஷமேலீட்டால் விரோத மனப்பான்மை கொண்டு பொதுஜன நன்மையை நாடாது இன்னுள நிலையெய்தினரென்னின் அது கிஞ்சித்தும் மிகையாகாது. ஆகவே மற்ற நாடுகள் தங்கள் முன்னேற்றத்தில் முனைந்து அறிவின் கண்ணையால் இயற்கையை யடிமைகொண்டு உலகம் பிரமிக்கத்தக்க அதிசயங்களைக் கண்டுபிடித்து இந்திரபோக மனுபவிக்க, நாமின்னும் பண்டைப்பெருமைகளைப் பாராட்டிப் பேசிக்கொண்டு கட்டைமாட்டுவண்டியினுடையவும் தள்ளியினுடையவும் ஆத்மசக்தியைப்பற்றி உருஜெபித்துக்கொண்டிருக்கிறோமென்றால், இந்நிலையை யூன்றிக் கவனிக்குங்கால் நம்நிலையைப்பற்றி ஆச்சரியப்பட வேண்டிய அவசியமின்றெனக் கூறுவேன்.

ஆகவே நம்முன்னேற்றத்துக் இது காறும் முட்டுக்கட்டையாய் நின்றது மதவுணர்ச்சியும், கடவுளுணர்ச்சியும், பழக்கவழக்கங்களும் அவைகளைப் போற்றிப் புலம்பும் காவியங்களுமே யாமென்பதறிந்தோம். இவைகளை யொழித்தாலல்லது நாட்டின் உண்மை விடுதலை யென்பது பாற்கடலே யாமென்பதை, மிகமுன்னேற்ற மடைந்த மக்களெனப்படும் ஆங்கிலேயர்களாண்டுவந்த கடந்த 150 ஆண்டுகளில் "மதமற்ற நிலையை" யகித்த காரணத்தினுலேயே முன்னேற்றத்துக் கடிகோலும் யாதொரு நிர்ணயத்தையும் செய்ய முடியாததினுலேயே அறியலாம். இவைகளை மனத்தே கொண்டு நாம் எடுத்த விஷயத்தை ஆராய்வோம்.

இந்தியமக்களனைவருக்கும் பெது; அனைவருடைய லக்ஷியத்தையும் சேரிப் பாடுபடுவது என வாய்பறையடித்துக்கொள்ளும் காங்கிரஸ் மக்கள் தன்னம்பிக்கையிலும் தன்முயற்சியிலும் அவநம்பிக்கை கொள்ளச்செய்யும்கடவுளுணர்ச்சியையும் மதவுணர்ச்சியையும் கப்பாற்றவே பாடுபடுவதாயுள்ளது. இதை அக்காங்கிரஸின் எகதலைவர் "மகாத்மா காந்தி" அவர்கள் தமது "செய்கைகளுக்கு என்? பேச்சுகளுக்குங்கூடக் கடவுளே காரணம்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லுவதாலும், அக்காங்கிரஸ் வகுத்த பிரஜா உரிமைத்திட்டத்தில் "ஒவ்வொரு தனி மனிதனுடையவும், வகுப்பினுடையவும், சமூகத்தினுடையவும் கலைகள், கல்வி, நாகரீகம், பாஷைகள், எழுத்துகள், பழக்க வழக்கங்கள், ஆச்சார அநுஷ்டானங்கள், மதம், மததர்ம ஸ்தாபனங்கள், மததர்ம சொத்துக்கள் முதலிய வெல்லாவற்றையும் எதிர்கால சுயராஜிய இந்தியாவில் சட்டப்பூர்வமாகக் காப்பாற்றப்படும்" என்று பொறித்திருத்தலாலும் அறியலாம். இத்துடன் காங்கிரஸ் மதாபிலாஷைத்திட்டம் வகுத்ததும் இதற்குச்சான்று பகரும். ஆனல் 'சுயமரியாதை" யென்னும் தன்மதிப்பு, பகுத்தறிவு முதலிய அழகிய பொருளுடைய இயக்கமோ சம்மை யடிமைகொண்ட மேற்சொன்ன அபத்தக்களஞ்சியங்களை வேரோடுகளைய அரும்பாடு பட்டுழைக்கிறது.

ஆகவே மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடும் மதம், கடவுள, கலைகள், அவைகளால் போற்றப்படும் வருணாச்சிரமம், சனாதனதர்மம், முதலியவைகளை யாதரிக்கும் தொழிலை வேரோடு களைந்து பகுத்தறிவு ஒழுக்கம் முதலிய இயக்கமும் முறண்டுவதியற்கையே. மக்களை மக்களினின்றும் பிரிக்கும் பகுத்தறிவை மூடப்பழக்க வழக்கங்களுக்குக்குருட்டு நம்பிக்கைக்கும், அறிவானத்துக்கும் அடிமைபாக்கி உலகில் உலவியாது தவிக்கும் 100-க்கு 90-க்கு மேற்பட்ட பாமரமக்களுக்கு நம் உண்மை விடுதலைக்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படி தூண்டும் பொழுது "காங்கிரஸ், காந்தி" என்னும் சொற்களில் மோகங்கொண்டு அபிமானத்தால் அதன் திட்டத்தை யாதரிக்கும் மக்களுக்கு உள்ளதை உள்ளபடி உரைத்துச்சொல்லவேண்டிய பொறுப்பு அறிவியக்கத்தைச் சார்ந்ததாலும், அவசியம் சேரும் பெழுத, காங்கிரசின் திட்டங்களைத் தாக்கியே வேண்டி சேரிடுகிறது.

சரித்திரத்தின்முறையில், பொதுஜன முன்னேற்றத்துறையில், ஆர்வங்கொண்டுழைக்கும் சுயமரியாதை யியக்கம் அதற்கெதிர்மாறாய் திட்டங்கள் வகுத்த காங்கிரசைக்குறைகூறுதிருத்தலெனைமியலும்? எனக்கேட்கிறேன். தீண்டப்படாதாருக்கும், பெண்சமூகத்துக்கும் சுயமரியாதை என்னசெய்துவிட்டது? என்று கேட்கும் காங்கிரஸ் வீரர்களும் அவர்களினுதரவை நாடும் தேசிய சுயமரியாதை வீரர்களும் காங்கிரஸ் வகுத்துள பிரஜா உரிமைத்திட்டத்தையும் மதநிந்தலைத்திட்டத்தையும் வைத்துக்கொண்டு அவர்களின் முன்னேற்றத்துக்காக என்ன செய்துவிட முடியும்? எனக்கேட்கிறேன்.

இனி நாட்டுத்தொழில் முறையில் எதிர்கால சுயராஜ்ய இந்தியா எவ்வேண்டுமெனக் காங்கிரஸ் வகுத்துள திட்டமும் மிக, மிகப் பிற்போக்கானதே யாகும். அதாவது ஒவ்வொருவனும் தனக்குத் தேவையான பொருள்களைத்தானே தனித்துப் பிறனுதவியின்றி உற்பத்தி செய்து கொண்டு வாழவேண்டுமென்பதானதுபல துறைகளிலும் மக்களைவளராவிக் கலந்துறவாடக்கூடாத, குறுகிய மனப்பான்மை கொண்ட மிருகப்பிராயத்திற்குக் கொண்டுசெல்வதாயுள்ளது. அதாவது பரம்பரைத்தொழில்களை யடிப்படையாகக்கொண்ட "வருணாச்சிரம" தர்மத்தை யாதரிப்பதாயுள்ளது.

இதை வலுப்படுத்தவே "ஹிந்தி" யைத் தேசபொதுப்பாஷையாக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் கதறுகின்றது. ஒருபாஷையைப் பொதுப்பாஷையாக வைக்கவேண்டின் அதில் ஏனை உலகில் மற்ற நாட்டினருடன் போட்டிபோடும் ஆற்றலையும் இயந்திர சாதனங்களுண்டாக்கவும், அவற்றைக் கையாளவுமான விஷயங்களைத் தன்னகத்தே கொண்டதாயிருக்கவேண்டுமென்பதை யெவரும் மறுக்கார். இவ்வாதாரத்தைக்கொண்டு பார்ப்போமானல் ஹிந்திப்பாஷையில் மம்மை படிமைகொண்ட மூடப்பழக்க வழக்கங்களை யாதரிக்கும் புதிதியனுபவத்துக் கெவ்வாப் புராணக்கதைகளையே கொண்டுள்ளதாதலின், சிறிதளவு கணையமும் யோக்கியமும், சுதந்திரமும், தேச முன்னேற்றத்திலார்வமும் கொண்ட எவனும் ஹிந்தியை யாதரிக்க முன்வராவனென்பதொருதலை.

ஆகவே காங்கிரஸ் என்பது, தேசியம், கதர், ஹிந்தி, மதுவிலக்கு முதலியவைகளைத் திரிபண்டாரமாக வெளிக்குக்காட்டி, வருணாச்சிரம, ராமராஜ்யம், மனுதர்ம ராஜ்யம் முதலியவைகளை யடிப்படையாகக்கொண்ட சுயராஜ்யத்துக்கு ஆக்கந்தேட மக்களென்னும் எலி அணில் முதலிய பிராணிகளைத் தன்வயப்படுத்தும் எடால் என்றே நான் கருதுகிறேன். காதரசில் பலகாலமுழன்றுபின்னர் அதன் புரட்டையுணர்ந்து வெளிப்போந்த அறுபது சுயமரியாதை வீரர்களின் கருத்தும் இஃதே யாகும்.

மக்களதியாமையினின்று விடுபட சமத்துமைச் சுயமரியாதையியக்கமும் அது பயக்கும் குடி அரசு, குமரன், புதுவைமுரசு, சண்டமாருதம், தமிழன், முன்னேற்றம், டாக்டர் குலசித்திரன் போன்ற ஒப்பில்லா மணிகளும் அரும்பாடுபட்டதன் பயனுப் மக்களதிவுச் சுடர்பெற்று அஞ்ஞான விருளைப் போக்கி விடுதலை நோக்கி எங்கி நிற்கின்றனர். காங்கிரஸ் புரட்டை மக்களுணருகின்றனர். 'தூங்குகிறவன் துடையில் நிரித்தது லாபம்' எனக் கருதுவது மூட்டாள்தன மாகும். "பலரும் பலகாலும் ஏமாறுவர்கள்"

(தொடர்ச்சி 15ம் பக்கம்பார்க்க.)

கோவையில்
நபிகள் நாயகம்
பிறந்த நாள் வைபவம்.

திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி. தலைவர்.

மௌல்வி நைனர் முகமது சாயபு,
ராவ்சாகிப் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்
ஈ. வெ. இராமசாமி உபன்யாசகர்கள்.

கோயமுத்தூர் அதார் ஜமாத்மஜீத் கமிட்டியார் அவர்களால் ஜமாத் காரியாலய மண்டபத்தில் திரு முகமது நபியவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அக்கொண்டாட்டத்திற்கு கோவை நகர முனிபல் சேர்மெனும், ஜில்லாபோர்டு பிரசிடெண்டும், சட்டசபை அங்கத்தினருமான, உயர்திரு திவான்பகதூர் சி. எல் இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமை வகிக்க வேண்டுமென்று சங்கத்தலைவர் ஜனுப் சி. கே. சாதர் மைதீன் சாயபு அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஜனுப் அ. மகமது சுல்தான் சாயபு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தலைவர் ஆசனத்தமர்ந்ததும் தலைவருக்கு மாலை இடப்பட்டது.

பிறகு ஜனுப் சி. கே. யாகூப் சாயபு அவர்களால் கிராஅத் ஓதப்பட்ட பின்பு தலைவர் முகவுரையாக சில வார்த்தைகள் சொன்னர்.

அதாவது:—

C. S. இரத்தினசபாபதிமுதலியார்

தலைமை உரை.

'கனவான்களே! நான் அனேக கூட்டங்களுக்கு தலைமை வகித்திருந்தாலும் இத்தமாதிரி மதசம்பந்தமான கூட்டங்களுக்கு நான் தலைமை வகித்ததேயில்லை. அன்றியும் எந்த மதத்தைப்பற்றியும் நான் விசேஷமாக ஏதும் தெரிந்தவனல்ல என்பதோடு இஸ்லாம் மதத்தைப்பற்றி நான் ஒன்றுமே அறிந்தவனல்ல. நான் பொதுவாகவே எல்லாமதங்களையும் பெருமையாய் நினைப்பதுடன் எல்லா மதப் பெரியார்களிடத்திலும் நான் மரியாதையும்பக்தியுங்காட்டுகின்றவன். மற்றும் உலகத்திற்குக்காரணபூதமான ஒரு கடவுள் உண்டு என்றும், அவர் எல்லாமதத்திற்கும், எல்லா மக்களுக்கும், எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவானவர் என்றும் கருதிக்கொண்டிருக்கின்றவன். இதைத்தவிர நான் எந்தவிதமான மதவிசாரனையும் அறிபாதவன். இப்படிப்பட்ட என்னை இந்த மிகவும் முக்கியமான ஒரு மதசம்பந்தமான பெரியாரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது தலைமை வகிக்கவேண்டும் என்று எனதுமூல்லீம்சகோதரர்கள்சம்மதம் கேட்டபோதே நான் பயந்து மறுத்துப்பார்த்தேன். ஆனாலும் அம்மறுப்பை எற்றுக்கொள்ளாமல் ஈரோட்டிலிருந்து திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் வருகிறார் என்றும் சொன்னதின் மீது அப்படியானால் எனக்கு ஒன்றும் அதிகமாக பேசவேண்டியவேலை இருக்காதென்றும், மற்றும், இந்தசமயத்தில் பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம் என்றும் கருதி ஆசையுடன் ஒப்புக்கொண்டேன். இந்த பரிசுத்தமான முக்கிய நாளில் மக்கள் தங்கள் தங்கள் ஒழுக்கங்களை சீர்திருத்திக்கொள்ளவும் மக்களுக்கு மக்கள் அன்புடனும் ஒற்றுமையுடனும், கூடிவாழவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டியதுதான் நமது கடமை என்று நான் கருதுகின்றேன்' என்பதாகச் சொல்லி அமர்ந்தார்.

பிறகு ஜனுப் மௌல்வி நைனு முகமது சாயபு அவர்கள் 'இஸ்லாத்தில் சமாதானமும், சமத்துவமும்' என்பது பற்றி நபிகள் சரித்திரத்திலிருந்தும், குர்ஆனிலிருந்தும் பல ஆதாரங்களுடன் பேசினர்.

C. M. இராமச்சந்திரன் செட்டியார்.

பிறகு கோயமுத்தூர் பிரபல வக்கீலும் அபீஷியல் ரிசீவருமான உயர்திரு ராவ்சாஹிப் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் பி. ஏ. பி. எல்., அவர்கள் திரு. முகமது நபி அவர்களின் பெருமையைப்பற்றியும், இஸ்லாம்மார்க்கத்தில் உள்ள சில மேன்மைகளைப்பற்றியும், எல்லாமதங்களையும் அறியவேண்டிய அவசியத்தைப்பற்றியும், ஒவ்வொரு மதத்தில் இருக்கும் நன்மைகளை யெல்லாம் எற்று கொளள வேண்டும் என்பது பற்றியும், மதஆதாரங்களை நன்றாய் ஆராய்ந்து பாராமல் எதையும் குற்றம் சொல்லக்கூடாதென்றும், இஸ்லாம் மார்க்கத்தைப்போலவே இந்துமார்க்கத்திலும் ஏகதடவுள் தத்துவம்தான் சொல்லப்பட்டிருக்கின்றதென்றும், எந்த ஆதாரங்களிலும் யார் சொன்னவைகளாயிருந்தாலும் குற்றமான விஷயங்கள் என்று காணப்படுபவைகளை நீக்கியே ஆகவேண்டுமென்றும் சொன்னதோடு, இந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றியும் எடுத்துச்சொன்னர்.

பிறகு டைரியாக அக்கிராசனர் திரு ஈ. வெ. இராமசாமியைபேசும்படி கேட்டுக்கொண்டார்.

ஈ. வெ இராமசாமி.

பிறகு திரு ஈ. வெ இராமசாமி அவர்கள் எழுந்து பேசியதின் சாரமாவது;-

தலைவரவர்களே! நண்பர்களே! முஸ்லீம் சமூகத்திற்கே முக்கியமான இந்த நாளில் எனக்கும் ஒரு சந்தர்ப்பமளித்து இங்கு பேசும்படி செய்ததற்கு எனது நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இங்கு எனக்கு முன்பாக மௌல்வி சாயபு அவர்களும் ராவ்சாஹிப் இராமச்சந்திரன்செட்டியார் அவர்களும் மிக்க அருமையான விஷயங்களை தக்க நூல் ஆதார ஆராய்ச்சியுடன் எடுத்துச் சொன்னர்கள். நானோ அத்தகாரியத்தில் சூனியமானவன். அதாவது நூலாராய்ச்சி என்பது எனக்கு கிடையாது. நான் அதில் அதிகக்கவலை செலுத்தியதுமில்லை. அது மாத்திரமல்லாமல் பெரியவர்கள், மதத்தலைவர்கள் என்பவர்களின் பெருமைகளும், அவர்களது உபதேசப்பெருமைகளுமே ஒரு சமூகத்தின் மேன்மைக்குப்போதுமானதுஎன்றுநான்கருதுகின்றவனுமல்ல. ஆதாரங்கள்எப்படிப்பட்டதாக இருந்தாலும், மதத்தலைவர்கள் 'மத அவதார புருஷர்கள்' என்பவர்கள் எவ்வளவு பெருமை பொருந்தியவர்களாக இருந்தாலும், இன்றைய நம்முடைய யோக்கியதை பிரத்தியட்சத்தில் எப்படி இருக்கின்றது? உலக மக்கள் வாழ்கையில் சமதர்மநிலைமை என்ன? நமது பிரத்தியட்ச அனுபவமான வடிக்கையும், மதிப்பும் எவ்வளவில் இருக்கின்றன? இதற்கு என்ன காரணம்? என்பவைபோன்ற வைகளைத்தான் எனது ஆராய்ச்சியாகும். அவைகளை ஆதாரமாகக்கொண்டுதான் பேசவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். அன்றியும் மௌல்வி சாயபு அவர்கள் தங்களது மதப்பெரியார் அவர்கள் பெருமையையும் மத ஆதாரமாகிய குர்ஆன் பெருமையையும் எடுத்துச்சொன்னது போல் நான் சொல்லவேண்டுமானால் எனது மதம் என்ற சொல்லப்படும் இந்து மதத்திற்கு யார் மதப்பெரியார்? எது மத ஆதாரம்? என்பதைக்கண்டுபிடிப்பதே கஷ்டமான பிரச்சினையாக ஏற்பட்டுவிடும். ஒரு சமயம் எனக்கு கஷ்டமாக இருப்பதற்கு காரணம் இருந்தாலும் இருக்கலாம். எனெனில் நான் நூலாராய்ச்சி அற்றவன். அதுமாத்திரமல்லாமல் 'மதங்களுக்கே விரோதி, அதிலும் இந்துமதத்திற்கே ஒரு பெரிய துரோகியாகவும், துரோகியாகவும் இருக்கின்றவன்' என்பதாகவெல்லாம் சொல்லப்படுகின்றவன். ஆதலால் என்னைத்தள்ளிவிட்டாலும் மற்றபடி வேறு எந்த இந்துமதப்பற்றர்களோ, பரிபாலகர்களோ, அபிமானிகளோ, பண்டிதர்களோ, ஆராய்ச்சியாளர்களோ, மதகுருமார்களோ யாராக இருந்தாலும் அவர்கள் இந்து மதத்திற்கு யார் தலைவர்? எது ஆதாரம்? என்பதுபோன்றவிஷயங்களை எடுத்துச்சொல்வது என்பது சுலபமான காரியமாயில்லை. மத ஆதாரம் என்று சொன்னால் முஸ்லீம்கள் என்று தங்களைச் சொல்லுகின்றவர்கள் ஒருவராவது நபி அவர்களையும் குர்ஆனையும்பற்றிக் கேட்டிராதவர்களும், அவைகளை ஒப்புக்கொள்ளமாட்டேன்' என்று மறுப்பவர்களும் இருக்கவே மாட்டார்கள். ஒப்புக்கொண்டே தீருவார்கள். ஆனால் இந்து என்று தங்களை சொல்லிக் கொள்ளுகின்றவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு உறுதியான, எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான, யாராலும் மறுக்க முடியாததான ஒரு மதத்தலைவரோ, ஒரு மத ஆதாரமோ இருப்பதாக இந்துக்கள் யாரும் சொல்ல முடியாது. அதுமாத்திரமல்ல ஒன்றை மற்றொன்று ஆட்சேபிக்கும்படியானதாகவும், ஒருவரைமற்றொருவர் குற்றம்சொல்லும்படியானதாகவும்தான்மதத்தலைவர்களும், மத ஆதாரங்களும் இருக்கின்றன.

நண்பர்களே!

உலகமெல்லாம் விழிப்படைந்து மதங்களின்மீது வெறுப்படைந்து அவ்வளவோடு மாத்திரமல்லாமல் கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியிலேயும், இறங்கி சிலர் 'கடவுளே இல்லை'யென்றும், சிலர் 'சந்தேகம்' என்றும் சிலர் 'இருந்தால்என்ன? இல்லாவிட்டால் என்ன? நமக்கு அதைப்பற்றிய கவலைவேண்டாம்' என்றும், 'கடவுள் உணர்ச்சியேஉலகமுற்போக்குக்கும் அறிவுவளர்ச்சிக்கும்சமத்துவத்திற்கும், சமதர்மத்திற்கும், தடையானது' என்றும் 'கடவுள் உணர்ச்சி ஒழிந்தாலொழிய சமதர்மம் நிலைபெறமுடியாது' என்றும் சொல்லிக்கொண்டும், உலகில் தேசம், மதம், ஜாதி, நிறம், வகுப்பு என்பவைகளான வித்தியாசங்களே இல்லாமல் எல்லாமக்களும் சமத்துவமுள்ள சகோதரர்களே என்பதாகவும், 'உன்தேசம், என்தேசம்' என்று சொல்லுவதே குறுகின நோக்கமும், சுகுப்பு துவேஷ உணர்ச்சியும் கொண்டதென்றும், தேசத்துக்குதேசம் யுத்தம் என்பதே கூடாதென்பதாகவும், ஜாதிமதத்தேசப்பிரசினையே உலகத்தில் இருக்கக்கூடாதென்றும் பேசப்படுகின்ற, அவற்றிற்காக பெரிய பெரிய முயற்சிகளும் செய்யப்படுகின்ற இக்காலத்தில் தனித் தனி மதநூல்கள் ஆராய்ச்சியில் இறங்கி அவற்றிலிருந்து உண்மைகளைக் கண்டுபிடித்து மக்கள் யோக்கியதையையும், போக்கையும் நிர்ணயிப்பது

[தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க]

விவாஹ விடுதலை.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

சென்ற ஓரிரண்டு வருடங்களாக 'விவாஹ ரத்து' என்னும் பேச்சு நம் இந்தியாவில் அதிலும், இந்து சமூகத்தில் அதிகமாக வழங்கி வந்துகொண்டிருக்கின்றது. புதிதாக ஒரு வழக்கத்தையோ, அல்லது சட்டத்தையோ, ஒரு சமூகத்திடையில்ஒருவரோ, பலரோ, நுழைக்க முயற்சிக்குங் காலையில் வழக்கமாக எவ்வளவு எதிர்ப்புகளும், விவாதங்களும், இழிவு சொற்களும் எதிர்பார்க்கக்கூடுமோ அவ்வளவு எதிர்ப்புகளும், விவாதக்களும், இழிவு சொற்களும், இந்த விவாஹ ரத்து என்னும் சீர்திருத்தத்தைக் கையாள வேண்டும் என முன் வருபவர்களும் இப்பொழுது அடைந்து வருகின்றார்கள். என்றும் நமது தமிழ நாட்டில் விவாஹ ரத்து என்பது அவசியமாக வேண்டும் என்றும், அது நமது சமூகத்திற்குத் தற்காலப்போக்கின்படிக்கும் மாதர்கள் நலன், சுதந்திரம் முதலிய உரிமைகள் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்றும் சிலர் ஒரு புதும் எழுதியும், பேசியும், வரவும், மற்றொருபுறம் 'புதியன வெல்லாம் புன்மையுடைத்து' 'மேனாட்டின் பழக்கவழக்கள் மிகவும் கொடியன' என்னும் கொள்கையுடைய நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் இவ்விவாஹ ரத்து என்னும் விஷயம் மேனாட்டிலேயே சொல்லமுடியாத ஒழுக்கக் குறைவுகளையும் இன்னல்களையும் விளைவித்து வருகின்றது போதாதென்றே, இவ்வாறு வேலையற்ற வழக்கறிஞர்களும், வீண்வாத காமசீர்திருத்தக்காரர்களும், அந்தப் பாழும் வழக்கத்தை ஒழுக்கத்தில் தலைசிறந்த உத்தம நாடாகிய நம் நாட்டிலும் நுழைக்கப்பார்க்கின்றார்கள் என்றும் கூக்குரலிட்டு வருகின்றனர். எனினும் 'சுயமரியாதை' என்னும் சுத்த ஒளி நம் தமிழ் நாட்டினுடை சுடர் விட்டெறிந்து, பண்டய வழக்கமும் பாழும் பழக்கமும், தண்டமிழ் நாட்டிடைச் சற்றும் தங்காதபடி சுட்டு எரித்து, நம் நாட்டு மகளிர்தம்மாட்டு மேன்மை காளும் தகைப்பட்டு ஈனி நிறந்தோங்கி அவர் தம் பிறப்புரிமையாகிய சுதந்திரம் என்பதை எவரையவர் யாவரும் என்றும் மறக்காதபடி தமக்கு அளிப்பான்வேண்டிப் பல் வேறு முறைகளையுஞ்சரித்து வந்தும், அவ்வாறு நம் இந்து சமூகப் பெண்மக்களுக்குச் சுதந்திரம் என்பது உண்மையாகவே அளிக்கப்படவேண்டுமானால், அச்சுதந்திரத்தில் 'விவாஹ ரத்து' என்னும் ஒரு பாகம் இன்றியமையாதது என்று நன்குணர்ந்து, அதைப்பற்றி இதற்கு முன் நடந்துவந்த பல்வேறு சுயமரியாதை (இதுபோதுநடந்த விருதுநகர் மகாநாடு உள்பட) மகாநாடுகளிலெல்லாம் ஒவ்வொரு தீர்மானத்தை இயற்றிவந்தும் இருப்பதால், இப்பொழுது இந்த 'விவாஹ ரத்து' என்னும் விஷயம் விவாதம் அற்று, நம் சமூகத்தினர் அனைவரும் அதனை நன்கு சிந்தே கமாததெளிந்து அதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியத்தினும் அவசியமாகும் எனக்கருதி இவ்வியாசத்தைத்தொடங்குவாம்.

முதலாவதாக, 'விவாஹ ரத்து' என்னும் சொற்றொடரின் பொருள் என்ன?

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சட்டத்தில் கண்டிருக்கும் பல காரணங்களில் ஒன்றிலாலோ, பலவாலோ நீதி மன்றத்தில் தங்கள் இனித் தம் பதிகளாய்ச் சேர்ந்திருந்து வாழ முடியாதென்றும், அதனால் தங்கள் திருமணம் என்னும் கட்டை ரத்துசெய்து விடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள, நியாயாதிபதி அக்காரணங்கள், இருக்கின்றனவா? தகுதியானவைகளா? என்றும், உண்மையாகவே இத் தம்பதிகள் இனி ஒத்திருந்து இல்லறம் நடாத்த முடியாதா? என்றும் தக்க சான்றுகளால் நிர்ணயித்து அத் தகைய ரத்தை யளிப்பார். அதன் பின்னர் அந்த ஆண் மகனும், அந்தப் பெண்ணும் 'விவாஹம் என்னும் ஒரு கயிற்றால் கட்டுண்டிருப்பதின்றும் நீங்கி, மற்றொரு பெண் மகனையும், மற்றொரு ஆண் மகனையும் முறையே மீண்டும் விவாஹம் செய்துகொள்ள சட்டப்படிக்குத் தகுதியுள்ளவர் ஆவார்கள். இதுவே 'விவாஹ ரத்து' என்னும் சொற்றொடரின் முக்கிய கருத்தாகும்.

இவ்விடத்திலேயே நமது வாசகர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமாகும். அது என்னவெனின் அவர்கள் இப்பொழுது மற்ற சமூகத்தாரோடு இந்து சமூகத்தினருக்கும் வழங்கப்பட்டுவரும் (Judicial Separation) 'சட்ட விலக்கு' என்பதையும், நாம் இப்பொழுது பேசப்புகும் (Divorce) 'விவாஹ ரத்து' என்பதையும், ஒன்றுக்கொன்று கலந்து விடக்கூடாது என்பதே.

'சட்ட விலக்கு' என்பது விவாஹம் செய்து கொண்ட இரு தம்பதிகளும் ஒரேயிடத்தில் இனிமேல் கணவன் மனைவியென்னும் நிலைமையில் இருக்கக் கூடாதென்பதேயாகும். இதிலே சட்டப்படிக்குக் கணவன் மனைவிக்குமாதாந்திரப் பணமும் கொடுக்கும்படியும் தீர்மானிக்கலாம். மேலும் சட்டத்தால் விலக்கப்பட்ட தம்பதிகள் மறுமுறை விவாகம் செய்துகொள்ள சட்டப்படிக்கு அருகர்கள் ஆகமாட்டார்கள். ஆனால் 'விவாகரத்து' செய்துகொண்ட தம்பதிகளோ எனின், அதன் பின்னர் தமமிருவருக்கும் எவ்விதமான சம்பந்தமும் அறவே இருபத்தொன்றியில், இஷ்டப்பட்டால் மீண்டுமொரு கல்யாணம் செய்துகொள்ளவும் தகுதியுடையவராவர் ஆவார்கள்.

'விவாகரத்து' என்னும் விஷயம் முக்கியமாகப் பெண் சுதந்திரத்தை ஒட்டியதென்றும், அது மகளிர் சுதந்திரத்திற்கு இன்றியமையாததென்றும் முன்னமே நாம் கூறினோம். அதிலுமநம் இந்து சமூகத்தில் உள்ள விவாக முறைமைப்படி இந்த 'விவாக ரத்து' இந்துமனைவியர்களுக்கு அவசியத்திலும் அவசியமாகும். எனினில் ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு 'இந்து' புருடன் ஒரு 'இந்து' மனைவியைத் திருமணம் செய்துகொள்கிறான் என்று வைத்துக்கொள்வோம். சில நாட்கள் கழிந்தபின் எதோ ஒரு நியாயமுள்ள காரணத்தாலோ அல்லது நியாயமற்ற காரணத்தாலோ, அவன் தன் மனைவியுடன ஒத்துவாழ முடியாதெனத் திண்ணமாக முடிவுக்கு வந்துவிடுகிறான். பின் அவன் வழக்கமாக என் செய்கின்றான்? நியாயஸ்தலத்தைச் சற்றும் நினைப்பதுமகூட இல்லை. அல்லது நியாயஸ்தலங்களுக்குப் பதிலாக விருத்தி தீர்ப்பதைப்புகட்டியும் அறிவுறுத்தியும் வரும் சமூகக்கட்டுப்பாட்டையோ அல்லது உலக அபிப்பிராயத்தையோ அணு சிறிதும் நாடுவதுமில்லை. மற்றொரு பெண்ணை அனேகதலகும் அதிய மறுமணம் புரிந்து கொள்கின்றான். வழக்கம்போல் தனது இரண்டாம் மனைவியாகிய இவ்விட கன்னியுடன் இனபவாழ்வு வாழ்கின்றான். ஆனால் அவனது முதல்மனைவியின்நிலைமையென்ன? அதுஎவ்வாறுஎன்பதை ஒழுக்கமும்உயிரும்அறிவும் அன்பும் முதிர்ந்தோங்கி நிற்கும் நம இந்து சமூகமறிதேனும் ஊராய்ந்து பாராப்பதில்லை. அவ்வாறு உணர்ந்தாலும் தெரியாதது போல் இருந்து விடுகின்றது. அல்லது 'அவள் நலவித யவ்வாறு இருக்கினறது' என்றும் 'அவள் வாங்கிவந்த வரம்' என்றும் பகுத்திர்ந்த கழவியர் போல் பலப்பட பாடித தன் சுயநலக் காரியங்களைச் செயயப்போதது விடுகின்றது. ஆனால் அந்தோ! அழுமுதல் மனைவியாகிய இளமையும் எழிலும் இக்க அக்கன்னிகையின் பாடு என்னவாயிற்று? அவளுக்கு இரண்டே இரண்டு இடங்கள உண்டு; ஆனால் அவள் எந்த இடத்தில் இருந்தபோதிலும 'சுகம்' என்பதுமட்டுமே இல்லை. ஒன்றே தனது 'மனவன' என்று சமூகம தன்னைக்கட்டிக்கொடுத்தக கருணையற்ற கரும்புலியின் சீறறம், உதை, கசவு மொழி முதலியனவற்றை 'தலைவித' 'தலைவித' என்னும் ஒரேயொரு மந்திரத்தை மட்டும் முணுமுணுத்துக்கொண்டே ஏற்றுக் கொண்டுமே, தனது சகசகுழந்தை தன் கணவனுடன உலலாசமாகச் சலலாபஞ்செயது ஓய்யாரமாக உண்டு உறங்கி பல்வேறு லீலைகள் செய்து சுகம் அனுபவிக்க, அதையும் தன் கண்களால் கண்டு தண்ணீர் தழும்பித் தாரையாய் ஓட மனம் புண்ணாகித் தினமும் தமோநிதன் மாற்றான் ஏவும் சிறுதொழில் புரிந்து, தன்னவள் வெறுப்பால் வீசியிடும் விரைச்சோற்றை வீழுங்கி வெந்து நொந்து வாடித்தினியும் வீண்வாழ்வினள் ஆவாள். மற்றொரு வழியாவது, இக்கொடியன் அகத்தினின்றும் அறவேயகன்று, தன் பிறப்பிடம் போந்து, அங்கண் உணவு, உடை முதலியன தன் தந்தை எவ்வளவு உபசாரத்துடன் அளித்த போதிலும், ஒரு இளம் பெண் இயற்கையாக விரும்பும் கணவனுடன் வாழும் இன்பவாழ்வு என்பதை அனுபவிக்க ஒரு வழியும அற்றவளாய் தன் சகோதரன் முதலியவர்கள் தன் கண் முன்பாகவே தத்தம் மனைவியரோடு வாழ்வதைக்கண்டும்; மற்றும் தன்னைப்போன்ற பெண்கள் அயல் வீடுகளில் தத்தம் கணவர்களோடு கூடி வாழ்வதை நோக்கியும் மனம் புழுங்கிச்சொல்லொணாததுயர் அனுபவிபபது மாகும். இவ்வாறு இருதலைக்கொள்ளி எறும்புபோல் பரிதவிக்கும் இப்பெண், தன்னுயிரினும் இனறவரை பொறுத்துப் பார்த்தும் தன் கணவன், பெற்றோர் சமூகம் ஆகிய அனைவரும் தன்னை இவ்வாறு கைவிட்டுமிருததிலும் கீழாக நடத்துவதைக்கண்டும், தனது கற்பையும் இழந்துவிடுவாளாயுல், அவளை சரிதளவேனும நியாயம, கருணை என்பது தன்னகத்தேகொண்ட மனிதன் குற்றங்கூறுதல் இயலுமோ?

இவ்வாறு நம் இந்து சமூகதனில் ஆணுக்குஒருசட்டமும், ஆணுக்கு ஒரு நீதியும,பெண்ணுக்கு மறறொருசட்டமுமாநீதியும,ஆகயிருத்தலையொழிபபானவேண்டியே இபபொழுது இந்து ஆண் மகனுக்கு எவ்வாறு முதல் மனைவியிருக்க அந்த விவாஹதையும் கூடரத்து செய்து கொளளாமலும, அந்த முதல் மனைவியின் சுகதையும், நன்மையையும் கனியாமலும், அதறகேற்ற காரணம் இருந்தும், இலலாமலும், மற்றொருபெண்ணை மணம் செய்து கொள்ளும் சுதந்திரம் இருக்கின்றதோ, அதே சுதந்திரம் இநத பெண மக்களுக்கும் வேண்டும் என்று நாம் கேட்கிறோம். நாம் 'விவாஹ ரத்து' மூலம் இந்து பெண்களுக்குக்கேட்டும் மறுமணச் சுதந்திரம இப்பொழுது ஆண்மகன் அனுபவிக்கும் சுதந்திரதைக்காட்டிலும் பலவிதத்திலும சிறந்தது என்பதறகுச் சந்தேகமே இல்லை. நமது உண்மையான கடமை யிப்பொழுது எனனவெனறால் ஒன்று (இப்பொழுது பெண்மக்கள் இருபபது போல்) ஆண்மக்கள் யாதொரு காரணத்தாலும் தன்மனைவி உயிருடன் இருக்தாலும் அல்லது இறந்தாலும் மற்றொரு மணம் செய்து கொள்ளவே கூடாது. அல்லது இப்போது எப்படி ஆணமக்கள் தஙகள் இஷ்டப்படி மேறொரு பெண்ணைத்திருமணம்

(தொடர்ச்சி 13ம் பகம் பாக்க.)

விருதுநகர் 3-வது சுயமரியாதை வாலிபர் மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

விருதுநகரில் 9-8-31ல் நடைபெற்ற 3வது சுயமரியாதை வாலிபர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களாவது:—

(1) சமதர்ம தத்துவமும், பொதுவுடைமைக் கொள்கையும் நாட்டில் ஓங்கவேண்டும் என்பதே நமது லட்சியமாயிருக்கின்றபடியால், விதி, கடவுள் செயல் என்பனபோன்ற உணர்ச்சிகள் மக்கள் மனதிலிருந்து ஒழிக்கப்படவேண்டும்.

(2) மக்கள் யாவரும் ஒன்றுபடவேண்டுமென்னும் மதப்பிரிவுகளும் மதசம்பந்தமான பழக்க வழக்கங்களும் ஒழியவேண்டும்.

(3) வர்ணாசிரமத்திலும், கடவுள் செயலென்பதிலும் நம்பிக்கைகொண்டிருக்கிற யாராலும், மக்களுக்கு சமத்துவமும் விடுதலையும் அடையும்படி செய்யமுடியாது என்று இந்த மகாநாடு உறுதியாகச் சொல்லுகிறது.

(4) பெண்களுக்கு ஆண்களைப்போலவே எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டாலொழிய பெண்கள் விடுதலை ஏற்படாதென்று இந்த மகாநாடு கருதுவதால் எல்லாத் துறைகளிலும் பெண்களுக்குச்சமத்துவம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(5) ஸ்தல ஸ்தாபனங்களிலும், பொதுக்குளம், பொதுப்பள்ளி, பொதுவழி முதலியவைகளிலும் சுயமரியாதை உணர்ச்சியுடைய இளைஞர்கள் அடையவேண்டிய உரிமைக்காக கூடிய விரைவில், திருச்சி பெரம்பலூரில்தாழ்த்தப்பட்டமக்களால் ஆரம்பிக்கப்போகும் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு அதில்நம்பிக்கை உள்ளவர்கள் வேண்டிய ஆதாவு கொடுக்கவேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(6) பெண்கள் விடுதலைக்கும், அறிவுப்பயிற்சிக்கும் பிள்ளைப்பேறு தடையாயிருப்பதாலும், எதிர்காலத்தில் நாகரீக வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப் போகும் பிற்காலத்தில் குழந்தைகளைப் போதிய போஷாப்புடனும், கல்வியுடனும் வளர்க்கவேண்டிய தவசியமானதாலும் பிள்ளைப்பேற்றை அவரவர்கள் தங்கள் தேகநிலை, பொருள்நிலை, அறிவுநிலைமைகளுக்குத் தக்கவாறு அடக்கியாள வேண்டுமென்றும் இம்மகாநாடு கருதுவதோடுகற்பாகூடிக்குவேண்டிய சாதனங்களையும்முறைகளையும்பற்றியஅறிவைப்போதிக்கத்தக்க ஸ்தாபனங்களை ஏற்சாங்கத்தாரும், பொதுஜனசேவைக்காரரும் ஏற்படுத்தவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

காங்கிரஸ்காரர்களுக்கும், மற்றஜாதிஇந்துக்களுக்கும் ஓர் அறிக்கை.

23-7-31ந்தேதி யன்று சென்னை எழும்பூர் ஐரோட்டிலிருக்கும் பி. கே. நாயரின் கூஷவரக்கடையில் நடந்தசம்பவம் மிக்கச்சிறியதாயிருந்த போதிலும்கூட அது இந்தநாகரீகசென்னையில்வெகு அவலட்சணமான காரியமேயாகும். அதாவது மேற்சொன்ன எழும்பூரில் வசிக்கும் ஓர் ஆதிதிராவிடர் கூஷவரத்திற்காக அக்கடைக்குப்போனதற்கு 'ஆதிதிராவிடராகையால் அவருக்குத்தலை கூஷவரம் செய்யகூடா'தென்று பலமாக கண்டித்துச்சொன்னதுமல்லாமல், போலீஸ்உத்தியோகஸ்தர்களிடம் தெரிவிக்கவும் பட்டார். இஃதென்ன அநியாயம்! காங்கிரஸ்காரர்கள் ஜாதித்தியாசத்தையொழிப்பதற்காக பாடுபடுகிறார்கள் என்பது பொய்யாகவே காணப்படுகிறது. உள்ளபடி அவர்களுக்கு இவ்வெண்ணம் இருக்குமாயின் இவர்கள் மற்ற மறியல்களைபோல தீண்டாமை விஷயத்திலும் மறியல் செய்யாமலிருப்பது பரிதாபமேயாகும். ஆகையால் இதைக்கண்ணுறும் காங்கிரஸ் கட்சியினரும் மற்ற இந்துக்களும் இந்த மூடத்தனமானதும் அநியாயமானதுமான செய்கையை திருத்திச்சரிப்படுமாறு கேட்டுக்கொள்ளுவதாக ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருப்பூர்.
முஸ்லீம் வாலிபர் சங்கம்.

ஷேசங்கத்தாரால் மீலாதேஷரீப் (நபிகள் நாயகம்(சல்) அவர்களின் ஜனனக்கொண்டாட்டவைபவம்) 28-7-31ந்தேதியன்று கொண்டாடப்பட்டது. அன்று மாலை 6 30 மணி முதல் 9மணி வரை அநேக ஏழைகளுக்கு அன்னமளித்து 9-30 மணிக்கு மஜீது ஜனப்பிரசிடெண்டு வா. அ. முகமது அலிசாயபு அவர்களின் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் ஜனாப்கள் மௌலானு மௌல்வி முகமது இப்ராஹிம் ஆலிம்சாயபு, மௌலானு மௌல்வி எம். ஏ. சைது முகமது ஆலிம்சாயபு ஆகிய முக்கியஸ்தர்கள் விஜயம் செய்திருந்ததுடன், இன்னும் பல முக்கியஸ்தர்களும், அநேக முஸ்லீம் வாலிபர்களும் விஜயம் செய்திருந்தார்கள். பிறகு அத்தீர்மானங்கள் நிறைவேறியபின் ஜனப் மணி உ. அப்துல் காதர் சாயபு அவர்களால் யாவருக்கும் வந்தனம் கூறப்பட்டு, தலைவர் தப்ருக் பெற்றுக்கொண்டதும் கூட்டமினிது கலைந்ததென ஷே சங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

மைலாப்பூர் நாடார் சங்கம்.

ஆகஸ்டு-மீ 30உ ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணிக்கு அம்பட்டன் வாராவதி, பாபா ஷாதோட்டம், 66-நெம்பர் பங்களாவில் ஷே சங்கத்தின் திறப்பு வைபவம் நடைபெறுமென திருவாளர்கள் வி. பி. நயினார் நாடார், மூலைப்பொழி திரவிய நாடார், பி. ஏ., ஆகியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

1930-வது மே-மீ த்தில் நடந்த ஈரோடு இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு நன்கொடை அளித்தவர்கள்.

திருவாளர்கள்:—			ரூபாய்.
ஈரோடு அ. கோ. ராமசாமி	அவர்கள்	...	500
ஈரோடு எம். சிங்கய்யா	,,	...	500
ஈ. அ. சங்கசாமி பிள்ளை	,,	...	400
ஈரோடு K. A. ஷேக்தாவுத் சாஹிப்	,,	...	300
கோவை சி. எஸ். இரத்தினசாபதி முதலியார்	,,	...	250
ஷே S. N. பொன்னய்யா கவுண்டர்	,,	...	250
ஷே V. அருணசலம் செட்டியார்	,,	...	250
பங்களாபுதூர் தாசப்ப கவுண்டர்	,,	...	250
கோவை ஆர். கே. ஷண்முகம்	,,	...	250
ஷே எ. டி. திருவெங்கிடசாமி முதலியார் அண் சன்ஸ்	,,	...	250
P. S G. & சன்ஸ்	,,	...	250
கோபி முத்துவேலப்பகவுண்டர்	,,	...	250
கள்ளிப்பட்டி சுப்பாமணிய கவுண்டர்	,,	....	245
சாறமடை செட்டியார்	,,	...	150
மாஸ்தி கவுண்டர்	,,	...	150
கொங்காபாளையம் நஞ்சப்ப கவுண்டர் ரூபாய் 250ல் சங்கீதமகாநாட்டு செலவுக்கு கொடுத்தது போக	,,	...	150
துக்கணாய்க்கன்பாளையம் பெருமாக்கவுண்டர்	,,	...	150
கோவை V. வெரிவாட செட்டியார்	,,	...	100
அட்டியண்ண கவுண்டர்	,,	...	100
ஈரோடு S. இராமசாமி	,,	...	100
கூகலூர் முத்துசாமி கவுண்டர்	,,	...	50
சென்னிமலை C.K. இராமசாமி முதலியார்	,,	...	50
கொங்கரபாளையம் நல்லாக்கவுண்டர்	,,	...	25
பாளையங்கோட்டை திவான்பகதூர் எஸ். குமாரசாமி செட்டியார்	,,	...	25
சாத்தூர் லோகநாத முதலியார்	,,	...	20
தீனப்பாளையம் வெள்ளிங்கிரி கவுண்டர்	,,	...	20
ஆக மொத்தம் ரூ.		...	5035

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

ஈரோடு 1931 ஹூ ஆகஸ்டு 23உ

விருதுநகர் மகாநாடு.

—:0:—

II.

மதமொழிப்புத் தீர்மானம்.

விருதுநகரில் கூடிய மூன்றுவது சுயமரியாதை மகாநாட்டு நடவடிக்கைகள் விஷயமாகவும், மகாநாடுகளின் வரவேற்புத் தலைவர்கள், தலைவர்கள் ஆகியவர்கள் உபன்யாசங்களைப் பற்றியும் சென்ற வாரம் எடுத்து எழுதி யிருந்தோம். மற்றும் அங்கு நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றி மறுமுறை எழுதுவதாகவும் குறிப்பிட்டிருந்தோம். ஆகவே அங்கு நிறை வேற்றப்பட்ட சில தீர்மானங்களைப்பற்றி இதில் ஆராய்வோம்.

"மனிதத் தன்மையைத் தடைப்படுத்துவதற்கு மதங்களின் பேரால் உள்ள பழக்க வழக்கங்கள் காரணமாயிருப்பதாலும், மதங்கள் ஒழியாமல் சகோதரத்தன்மை வளராததாலும் எல்லா மதங்களும் ஒழிந்து போகவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது" என்பது முதல் தீர்மானமாகும்.

இத்தீர்மானமானது இந்தியாவில் உள்ள தேசிய வாதிகள் என்பவர்கள் யாருக்குமே விரோதமானதாகும் என்பதோடு, தேசியத் தலைவர்களுக்கும் தேசியத் தொண்டர்களுக்கும் மிக மிக விரோதமானதாகும்.

மற்றும், "இந்தியத்தொழிலாளர்கள் தலைவர்களான" திரு. கிரி, திரு. சிவராவ் போன்றோருக்கும், சமதர்மத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற "நவஜவான் பாரத சபை வீரர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் திரு. போஸ் கூட்டத்தாருக்கும், இந்தியாவில் பூரண சுயேச்சையையும், போல்ஷ் விசத்தையும் பற்றிப் பேசிப் "பொது உடைமைக்காரர்" என்று சொல்லிக்கொள்ளும் திரு. ஜவஹர்லால் கூட்டத்தாருக்கும் இத்தீர்மானம் விரோதமானதேயாகும். இதுமாத்திரமல்லாமல் மற்றபடி அஹிம்சா தர்மத்தையும், இராம இராஜியத்தையும் பற்றிப் பேசி வருணாச்சிரமத்தில் பூரண நம்பிக்கைவைத்து இருக்கும் ஸ்ரீமத்பகவத்கீதை உபாசகராகிய "மகாத்மா" காந்திக்கும் அவரது கூட்டத்தாராகிய திரு. இராஜகோபாலாச்சாரி போன்றோருக்கும் விரோதமானதும், காதால் கேட்பதற்கே சகிக்க முடியாத அளவு கர்ண கடூரமானதுமாகும்.

இவைமாத்திரமல்லால், சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களிலேயே சிலருக்கு இது பிடிக்காத தீர்மானமாகும் என்பதிலும் உண்மை இல்லாமல் போகாது.

ஆகவே இந்தியாவின் ஜனத்தொகையில் முஸ்லீம், கிறிஸ்தவர்கள் முதலிய அன்னிய மதக்காரர்கள் என்பவர்கள் உள்பட 100-க்கு 99 பேர்களுக்கும், இந்தியாவின் பொதுநல ஸ்தாபனங்கள் என்பவைகளில் 100-க்கு 99 7/8 ஸ்தாபனங்களுக்கும், உலக மனித சமூகத்திலேயே 100-க்கு 80 பேர்களுக்கும் திருப்தியளிக்காததும், விரோதமானதுமான தீர்மானமாகும்.

இத்தீர்மானத்திற்கு இத்தனை வித எதிர்ப்புகளும், அதிருப்திகளும் இருக்கக் காரணமென்ன வென்று பார்ப்போமானால், மனிதனுடைய அறிவைக் கெடுக்கும் மயக்கம்தரும் போதை வஸ்துக்களைப் போலவே மதத்தின் தத்துவங்களும் இருக்கின்றபடியால், அதில் ஈடுபட்ட எவருக்கும் மதபோதை ஏற்பட்டு, பகுத்தறிவுமழுங்கி, மூடபக்தியும், குருட்டு நம்பிக்கையும் ஏற்பட்டு, சுயம் என்னும் சுவாதீனத்தை இழக்கவேண்டியவர்களாய் விடுகின்றார்கள் என்பதே யாகும்.

உதாரணமாக, இந்துமதம் என்பதைப்பற்றியே முதலில் எடுத்துக் கொண்டோமானால் அம்மதத்திலில் மேன்மை யடைகின்றவர்களும், மதத்தின் பயனாய் சோம்பேறிகளாகவே இருந்து பாடுபடாமல், ஊரான் உழைப்பில் வயிற்றை நிறப்பி மேன்மையாய் வாழுகின்றவர்களும் இந்துமதத்தைக் காப்பாற்றநிலைநிறுத்தப்படாடுபட வேண்டியதும் அதற்கு எதிரிடையாய் இருப்பவர்கள் மீதும், அதை ஒழிக்க முயற்சிப்பவர்கள் மீதும் ஆத்திரப்பட்டு, மதம் ஒழிக்கப்படாமல் இருக்கத் தடைகல்லாய்-முட்டுக்கட்டையாய் இருக்கவேண்டியதும் இயற்கை என்று வைத்துக் கொண்டாலும், இந்துமதத்தின் காரணமாய் ஈனஜாதியாய், இழிகுலமாய், அடிமையாய், வேசிமகனாய், கீழ் ஜாதியாய்க் கருதப்படுகின்ற மக்களும் சரீரத்தைப் பிழிந்து பாடுபட்டுப் பாட்டின் பலனை சோம்பேறிகளுக்கும், சூட்சிக்காரர்களுக்கும் கொள்ளை கொடுத்துவிட்டு நாயினுங் கீழாய், மலந்தின்னும் நாய்க்கிருக்கும் சுதந்திரத்திற்குக்கூட உரிமை யில்லாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற 'அசையும் பிணங்களான மக்கள்' தங்களை இந்நிலைமைக்கு ஆளாக்கிய இந்துமதத்தைக் காப்பாற்ற முயற்சிக்கின்றார்கள்-ஒழிக்க முயற்சிக்கின்றவர்களையும் எதிர்க்கின்றார்கள் என்றால் மதங்களால் ஏற்பட்ட மதியீனத்திற்கும், மானமற்ற தன்மைக்கும் வேறு என்ன உதாரணங்கூறக் கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

கள்குடி வெறியன், சாராயக் குடிவெறியன் ஆகியவர்களால் நாட்டுக்கு, மக்களுக்கு, மனித வாழ்க்கைக்கு, மனிதத்தன்மைக்கு ஏற்படும் தொல்லையை விட கேட்டைவிட மதவெறியர்களால் ஏற்படும் தொல்லையும் கேடும் அளவிடமுடியாத அதிகமென்றே சொல்லுவோம்.

இன்றைய தினம் இந்த நாட்டு ஆட்சிக்கு "வெள்ளைக்காரனுடையஆதிக்கம்கூடாது" என்னும் அரசியல் கிளர்ச்சி என்பதும் தேசியக்கிளர்ச்சி என்பதும் மதத்தை—ஜாதியை அடிப்படையாகக்கொண்டதா? அல்லது மானத்தை, சுதந்திரத்தை விடுதலையை அடிப்படையாகக் கொண்டதா? என்பதை யோசித்தால் மதவெறியின் தன்மை தானாக விளங்கும்.

சாதாரணமாக வெள்ளைக்கார அரசாட்சியின் ஆதிக்கத்தை இன்றையதினம் இந்துக்கள் ஒழிக்க வேண்டும் என்பதின் கருத்தெல்லாம் அவன் வேறுமதக்காரனாய் இருக்கிறான் என்பதல்லாமல் வேறு என்ன தத்துவத்தில் இன்று அன்னிய ஆட்சி என்பதற்கு காரணம் சொல்லப்படுகின்றது? என்பதை கவனித்துப்பாருங்கள். வேண்டுமானால், இன்னும் ஒரு காரணம் அதிகமாய்ச் சொல்லலாம். என்னவென்றால், பொருளாதார சம்பந்தமானகாரணம்-அதாவது 'இந்தியர்கள் செல்வம் அன்னிய நாட்டிற்கு போகின்றது" என்பதுமாகும். என்றாலும், இது சாமரமக்களை ஏமாற்றுவதற்குச் சொல்லிக்கொள்ளப்படும் காரணமேயாகும்.

ஏனெனில், இந்துமதத்தால் இந்தியநாட்டுச் செல்வம் நாசமாவதைவிட—ஏழைத்தொழிலாளிகள் கொள்ளை அடிக்கப்படுவதை விட அன்னிய ஆட்சியால் அதிகக்கஷ்டம் இல்லையென்றாலும், இதை ஆதாரபூர்வமாய் சொல்லாமல் ஒரு காரணம் என்றே ஒப்புக்கொண்டு பார்த்தாலும்கூட ஒருமனிதனுக்கு அவனுடைய சுதந்திரமும் சுயமரியாதையும் முக்கியமானதா? அல்லது பொருளாதாரத்தத்துவமே முக்கியமானதா? என்று யோசித்தோமேயானால் பொருளின் முக்கியாம்சம் எவ்வளவோ கீழான படிக்குப் போய்விடும். ஆனால் சுதந்திரமும், சுயமரியாதையும் மேலானது என்பதை எப்படிப்பட்ட மோசக்காரனும் ஒப்புக்கொண்டு தான் தீருவான்.

ஆகவே, இந்த நிலைமையில் இந்திய மக்களுடைய சுதந்திரமும், சுயமரியாதையும் பாதிக்கப்படுவது வெள்ளைக்கார ஆட்சியாலா? இந்துமதத்தாலா? என்பதை இப்போது நடுநிலைமையில் இருந்து யோசித்துபார்த்தால் தானாகவே உண்மை விளங்கும். மேலும் இந்துமதத்திலில்தான் இந்தியாவில் "கீழ்ஜாதி மனிதனும், ஈனஜாதி மனிதனும் எந்த நிலைமையிலும் சுதந்திரம் பாராட்டக்கூடாதசூத்திரனும், சண்டாளனும் தெருவில் நடக்கவும் குளத்தில் தண்ணீர் மொள்ளவும் கோயிலுக்குள் புகவும் அருகில் வரவும் யோக்கியதையற்ற மக்களு" இருந்துவருகின்றார்களா? அல்லது வெள்ளைக்கார ஆட்சியின் பயனாய் இருந்து வருகின்றார்களா? என்று கேட்கின்றோம்.

ஆகவே மனிதத்தன்மையும், சகோதரத்தன்மையும் ஏற்பட வேண்டுமானால் மதங்கள் ஒழிய வேண்டும் என்பதாக விருதுநகர் மகாநாடு தீர்மானம் செய்திருப்பதில் அறிஞர்கள்-உண்மைச்சுதந்திர வாதிகள்-சுயமரியாதை உள்ளவர்கள்-சமதர்மத்தை விரும்புகின்றவர்கள் என்னகுற்றம் சொல்ல முடியும்? என்று கேட்கின்றோம்.

அன்றியும் இந்நாட்டின் இன்றைய சுதந்திர ஆசைக்கு, சகோதரத்துவத்திற்கு, சினேக தத்துவத்திற்கு மதங்களே அதாவது இந்து, முஸ்லீம், கிறிஸ்து முதலிய மதங்களே இடையூறாய் இருந்துகொண்டு உட்பகையையும், சாந்தியற்ற தன்மையையும் உண்டாக்கிவருவதை நாம்நேரிலேயே தினமும் பார்த்தும், கேட்டும் வருகின்றோமாதலால் விருதுநகர் மகாநாட்டில் "மக்களுக்குள் எவ்விதமதஉணர்ச்சியும்இருக்கக்கூடாது" என்றும் தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

ஆகவே மதமானது ஒருமனி தனுச்சு புறத்தன்மையிலும், அகத்தன்மையிலும் கேடுசூழ்வ தாகவே இருக்கின்றபடியால், உலகத்திற்குப் பொதுநலசேவை என்பது முதலாவதாக மதங்களை அழிப்பதே, மதஉணர்ச்சிகளை ஒழிப்பதே என்பதாகத்தான் முடிவுகொள்ள வேண்டியிருக் கின்றது.

மக்கள் காட்டுமிராண்டிகளாய் இருந்தகாலத்தில்—கல்வி அறிவு உலக அனுபவம் ஞானம் இல் லாதிருந்த காலத்தில்-மக்களை நல் வழிப்படுத்துவதற்கு என்று ஒரு சமயம் மதம் என்பதாக கற்பனை செய்து மக்களுக்கு ஒரு பயத் தை உண்டாக்கி அவர்களது ஞானமற்ற சுதந்திரத்தை அட க்க ஏற்பாடு செய்ததாக இருக் கலாம். ஆனாலும் இன்று உல கம் பொருள் தத்துவஞானமும் விஞ்ஞானஞானமும எற்பட வச தி ஏற்பட்டு பெருகிவரும் நாளில் காட்டுமிராண்டித் தனகாலத்தி லேற்படுத்தப்பட்ட. மதமும், மத உணர்ச்சியும் எதற்கு என்றுதான் கேட்கின்றோம்.

இந்தப்படி நாம் சொல்லும் போது இதற்கு வேறுவழியில் சமாதானம் சொல்ல முடியாத மக்கள் சிலரால் இரண்டுவிதமான கேள்விகள் கேட்கப்படுகின்றன

அவையாவன,

ஒன்று "மதத்தை ஒழிக்கவே ண்டும் என்று சொல்லுகின்ற நீங்கள், அந்த இடத்தில் (அதா வது மதநம்பிக்கையுள்ள இடத் தில்) வேறு எதை ஏற்படுத்தப் போகின்றீர்கள்?"

இரண்டு "நீங்கள் என்வெறும் அழிவு வேலைகளையே செய்துவ ருகின்றீர்கள்? என்பவைகளே யாகும்.

இந்தக் கேள்விகள் மதவெறி யால் மயக்கமெய்திய அடிமைத் தன்மையின் பிரதிபிம்பமே யொ ழிய மற்றபடி இக்கேள் விகளில் எவ்வித ஜீவத்தன்மை யும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும், எனெனில் மதமோ அல்லது வேறு எதுவோ ஒன்று அதாவது மனிதனை அடிமை கொண்டு. அவனது சுய அறி வைக் கெடுக்கக்கூடியதான சாத னம் மனிதவாழ்க்கைக்கு அவசிய மனது என்று கருதுவதினாலே யே இம்மாதிரி கேட்கச்செய்கி றது. ஆனால் அப்படிப்பட்ட எது வும் மனிதத்தன்மைக்கும், வாழ் க்கை முற்போக்குக்கும் தடை யானது கேடானது என்று முடி வு செய்யப்பட்ட பிறகு அந்த இடத்தில் வேறு எதை நம்மால் வைக்கமுடியும் என்பது நமக்கு விளங்கவில்லை. இன்னமும் விள க்கமாகச் சொல்லவேண்டுமானால், ஒரு உதாரணத்தைச் சொல் லிக்காட்டுகின்றோம்.

அதாவது,

ஒரு மனிதனின் சரீர சுகத் திற்கு விரோதமான ஒரு நோ யை ஒழிக்க வேண்டுமானால், 'அந்த மனிதனுக்கு இந்தவியாதி ஒழிந்து போனால் அந்த இடத் தில் வேறு எதைவைக்கின்றது' என்று யாராவது கேட்டால் அவரை அறிவுள்ள மனிதன் என்று யாராவது சொல்லக்கூடு மா? ஒரு சிலந்தி கட்டியை அறு க்கும் வைத்தியனிடம் போய் இந்தச் சிலந்திக்கு பதில் வேறு என்ன கட்டியை உண்டாக்க போகிறாய்? என்று கேட்டால் வைத்தியன் என்ன சொல்லு வான்?

மதத்தின் பாலுப் மனித சமூகத்தின் அறிவு தடைப்படு கின்றது, மானம் தடைப்படுகின் றது, ஒற்றுமை தடைப்படுகின் றது. மனிதனுக்குள் தோன் றும் சுதந்திரவுணர்ச்சி தடைப் படுகின்றது, செல்வம் பாழாகின் றது, அடிமைத்தனமும் வளர் கின்றது. சாந்தி என்பதேஇல்லா மல் பகையும் குரோதமும், போ ரும் வளர்ந்துவருகின்றது,என்று ல் "அதற்குப்பதில் என்ன செய் யப் போகின்றாய்?" என்று எதற் காகக் கேட்பது என்பதை யோ சித்தால் அந்தக் கேள்வி ஒரு மூட்டாள்தனமான கேள்வி என் பதை விட அதற்கு வேறு பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்றே கருதுகின்றோம்.

நோய் ஒழிந்தால் எப்படித் திரேக சௌக்கியம் தானாகவே ஏற்பட்டு விடுமோ அதுபோல் மதம் ஒழிந்தால் மனித சமூகம் தானாகவே சுதந்திரத்தையும், அறிவையும், ஒற்றுமையையும் பெற்று மேன்மையடையும் என் கின்றோம்.

ஆகவே, இந்த வேலை ஆக்க வேலையா? அழிவுவேலையா? என் பதையோசித்தால் இதனுள் பொதிந்து கிடக்கும் ஆக்கத்த ன்மையும் தானாகவே விளங்கும்.

தீமையை அகற்றுவது அழி வுவேலையானால் மதத்தைஒழிப் பது என்பதும் அழிவுவேலையாய் இருந்து போகட்டும். அதைப் பற்றி யாரும் கவலைப்படவேண் டியதில்லை மற்ற தீர்மானங்களை ப்பற்றி பின்னால் விளக்கலாம்.

"வகுப்புவாதம்"

இன்றைய அரசியலில்—தேசி யத்தில் ஒரு மனிதன் அரசியல் ஞானியாகவும், தீவிரதேசியவாதி யாகவும் ஆகவேண்டுமானால் அ வன் எவ்வளவு அயோக்கியனா வும், எவ்வளவு சுயநலக்காரனா வும், சமயத்திற்குத் தகுந்தபடி கூட்டிக்கரணம் போடுபவனா வும் இருந்தாலும் ஒரு வார்த் தையை மாத்திரம் சொல்லிவிட் டால் போதும்.

அதாவது

"வகுப்புவாதம் கூடாது" என் றால்,

உடனே அவனுக்கு வேண் டிய விளம்பரங்களும் தேசாபி மானி—தேசபக்தன் என்கின்ற பட்டங்களும், அரசியல் ஞானி-தீவிர தேசியவாதி-என்கின்ற கா மகாரணங்களும் ஏற்பட்டுவிடும்.

நமது பார்ப்பனர்களும் அப்ப டிப்பட்டவனை ஊருராய் இழு த்துக்கொண்டு போய் உபசாரப் பத்திரங்கள் வாங்கிக்கொடுத்து, கூட்டம் கூட்டுவித்து, மாலைகள் போட்டு மறியாதை செய்துபுகழ் மாலை பாடி அனுப்பி விடுவார் கள்.

மற்றபடி ஒருவன் எவ்வளவு யோக்கியனாயிருந்தாலும் நா ட்டை யக்கரனாகவும் உண்மையில் தே சத்திற்காகவே மக்களுக்காகவே பாடுபடுகின்றவனாகவும், தியா கங்கள் செய்து கஷ்ட நஷ்டப் பட்டவனாகவும் இருந்தாலும், "வகுப்பின் போல் கொடுமைப் படுத்தப்பட்டுமக்களோடுமக்களா ய்ச்சேர்க்கப்படாபல்சட்டத்தின் படியும்சமூகப்பழக்கவழக்கத்தின் படியும்பிறித்துவைத்திருக்கும்மக் களுக்கு மற்ற மக்களுக்குண்டா னவகுப்புரிமைகொடுக்கவேண்டா மா'என்றுகேட்டுவிட்டால் 'நமது தேசிய'வாதிகளுக்குஉடனே வ ந்துவிடும் கோபம்

அவனை தேசத்துரோகி என் றும், வகுப்புவாதி என்றும், தே சிய ஞானமற்றவனென்றும்தேச விடுதலைக்கும். சமரசத்திற்கும், சுயாராஜ்யத்திற்கும் முட்டுக்கட் டை போடுகிறவன் என்றும் தூற்ற ஆரம்பித்து விடுவார்கள்.

அதுதான் போகட்டும் 'மதம் எல்லாம் ஒன்றாகவேண்டும், வகு ப்பு எல்லாம் ஒன்றாகவேண்டும், மதப்பிரிவுவகுப்புப்பிரிவுஎன்பது கூடாது, மதத்தின்பேரா லும்,வகுப்பின் பேராலும் மக்கள் சட்டத்திலும், சமூகவாழ்க்கையி லும்பிறிக்கப்படக்கூடாதுஉரிமை தாழ்வு கூடாது' என்று ஒருவன் சொன்னால் உடனே அவன் 'தாழ் க்கனும்மலுக்கனும்ஒன்று?' 'பார்ப் பானும்பறையனும்ஒன்று?' என்ன 'நீமதத்துரோகியாயிருக்கிறாயே, வகுப்புத் துவேஷியாயிருக்கின்று யே' என்று சொல்லிவிடுவார்கள்.

ஃஃ ஃஃ

"அப்படியானால் அவர்களுக்கு தனி உரிமை கொடுக்கவேண்டா மா?" என்றால், 'இதெல்லாம்தேச த்துரோகம் தேசியத்திற்குவிரோ தம்' என்று சொல்லி தூற்ற ஆ ரம்பித்து விடுவார்கள்.

ஃஃ ஃஃ

இந்தக் காரணத்தினாலேயே தேசத்திற்காக இரவும் பகலும் பாடுபட்டு ஜெயிலுக்குச் சென்று கஷ்டப்பட்டு இந்திய மக்களைத் தட்டி எழுப்பின வீரர்களாகிய மௌலானா ஷௌகத்அலிபோன் றவர்கள் எல்லாம் இன்று தேசத் துரோகிகளாகவும், மக்களுடைய பிரதிநிதிகள் அல்லாதார்களாகவும் 'ஆகிவிட்டார்கள்.'

ஃஃ ஃஃ

நகத்தில் அழுக்குப்படாமல் பட்டு வெல்வெட்டின் மீது நட ந்து கொண்டு வரைவிட்டு-வீட் டை விட்டு அசையாமல், தன்தன் தொழிலையும் விடாமல், தேசியத் தின் போல் பெருமை பெற்று பணமும் சம்பாதித்துக்கொண்டு சௌரவமாயிருந்துகொண்டு பெ ரும் பெரும் கூட்டங்களில் தலைமை வகிக்க மாத்திரம் வந்து புகழ்மாலை பெற்றுப்போய்க்கொ ண்டிருக்கும் திருவாளர்கள் டாக் டர் அன்சாரி, முத்தாங்கம், விஜ யராகவாச்சாரி போன்ற "பெரி யார்கள்" இன்று தேசிய வாதி களாய்-இந்திய மக்கள் பிரதிநிதி களாய்-காங்கிரஸ் தலைவர்களாய்-திருகாந்தியின் உத்தமதோழர்க ளாய்-விளங்குகின்றார்கள். காங்கி ரஸ்மண்டபங்களுக்குதங்கள்பெயர் இடப்படத்தக்கவர்களாய் விளம் பரம்செய்யப்படுகின்றார்கள்.

ஃஃ ஃஃ

வகுப்புவாதமே! உனக்கு ஏற் பட்டு இருக்கும் இழிவுதான் எவ் வளவு? நினைக்கவே பயமாயிருக் கின்றதே! இதிலிருந்து "தேசி ய"வாதத்திற்கு பெருமையும்சு கமும் கீர்த்தியும் கிடைக்கின்றதெ ன்பதும். "வகுப்பு"வாதத்திற்கு சிறுமையும், கஷ்டமும், தூரோ கமும் கிடைக்கின்றதென்பதும நன்கு விளங்குகின்றது.

ஃஃ ஃஃ

இருந்தாலும் பறவாயில்லை. நாம வகுபபு வாதியேதான். எது வரையில்? என்று கேட்கின்றீர் களேயானால் 'இந்தியாவில் வகுப் புப் பிரிவு என்பது எதன் பேரி லானாலும் சரி, அதாவது மத

ளுக்குள் தேசத்தின் பேரிலோ மதத்தின் பேரிலோ, நிறத்தின் பேரிலோ, ஜாதியின் பேரிலோ, வகுப்பின் பேரிலோ, தொழிலின் பேரிலோ, ஆண்பெண்பிறகியின் பேரிலோ ஆகிய எவைகளின் பேரிலாவதும் சரி. பிறிவுகள் என்று சட்டத்திலோ— சமூகத்திலோ பழக்கவழக்கத்திலோ இருக்கின்றவரை—மனதால்எண்ணப்படுகின்றவரை கண்டிப்பாய் நாம் வகுப்புவாதியேதான்'' என்பதை அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுகின்றோம்.

ஃ ஃ

தேசியவாதிகளே! கோபித்துக் கொள்ளாதீர்கள்!! கோபித்துக் கொள்ளாதீர்கள்!!! எனெனில் நாம் மாத்திரம் வகுப்புவாதியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மற்றும் யார்? யார்? எனிலோ ஒவ்வொரு வருணப் பிரிவில்நம்பிக்கை இருக்கும், ஒவ்வொரு வருணத்தின் உரிமையையும் காப்பாற்ற முயற்சிக்கும் உங்கள் ''மகாத்மா'' வருண வகுப்பு வாதி.

ஃ ஃ

ஒவ்வொரு மதத்தையும் காப்பாற்றும்—மதநடு நிலைமை வகிக்கும் உங்கள் காங்கிரசு வகுப்பு வாதி.

ஃ ஃ

எந்த வகுப்பாருடைய எந்த ஜாதியாருடைய மனமும் புண்படாமல் நடந்துகொள்ளும் உங்கள் ''போல்ஸ்விக்வீர்'' ஜவஹர்லால் வகுப்பு வாதி.

ஃ ஃ

ஒவ்வொரு வகுப்பாருடைய கலைகள்—ஆசாரங்கள் பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள் முதலியவைகளைக் காப்பாற்ற ஜாமீன் கொடுக்கும் உங்கள் காங்கிரசுக் காரியக் கமிட்டி வகுப்பு வாதி.

ஃ ஃ

ஹிந்தி தெரியாதவர்களுக்குக் காரியக் கமிட்டியில் இடமில்லாத காங்கிரஸ் தேர்தல் வகுப்பு வாதி.

ஃ ஃ

கதர் கட்டாதவர்களுக்கு ஓட்டில்லை என்கின்ற காங்கிரசு தேர்தல் ஓட்டர்களின் யோக்கியதாபக்ஷம் வகுப்பு வாதி.

ஃ ஃ

தீண்டாதவர்களுக்குக் கோயில்—குளம்—பள்ளிக்கூடம் தனியே கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற திரு. மாளவியா வகுப்பு வாதி.

ஃ ஃ

கடைசியாக மதங்களும், வகுப்புகளும் இருந்து வருவதை க்கண்ணில் நேரில் பார்த்துக் கொண்டும், அதனதன் உரிமைகளைத் தவறாமல் அளிப்பதாக வாக்களித்துக் கொண்டும் இருக்கின்ற மக்கள் அந்தந்த வகுப்பினருக்கு பிரதிநிதித்துவ உரிமை கொடுப்பதற்கு மறுப்பதும்—யாராவது கேட்டால் அதற்கு வகுப்புவாதம் என்று பெயர் கொடுப்பதும் எல்லாவற்றையும்விட பெரிய வகுப்பு வாதி என்னப்படும்.

ஃ ஃ

தேசமே வகுப்புகளின் கண்காட்சிசாலையாய்-மதங்களின்கண்காட்சி சாலையாய் ஜாதிகளின் வகுப்புகளின் கண்காட்சி சாலையாய் இருக்கும்போது சட்டசபையிலும், உத்தியோகத்திலும்-மதவகுப்புப்பிரதிநிதித்துவம்இருந்தால் என்ன முழுகிப்போகுது? என்று கேட்கின்றோம்.

சட்டசபையில் திரு பாண்டியன் தீர்மானம்

உயர் திரு. W. P. A. சௌந்திரபாண்டியன் எம். எல். சி. அவர்கள் ''இராமனாதபுரம் ஜில்லா தேவ கோட்டை முதலிய சுற்றுப்பக்கங்களிலுள்ள ஆதிதிராவிடர்கள் என்பவர்களை அங்குள்ள உயர்ந்த ஜாதியார்களென்பவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தி வருவதால் அரசாங்கத்தார் அதை விசாரித்து உண்மை அறிந்து அதன்மேல்தக்கநடவடிக்கை எடுத்துக்கொள்ள ஒருகமிட்டி நியமிக்கவேண்டு''மென்று சென்னைசட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதை அரசாங்கஇந்திய அங்கத்தினரும் பார்ப்பன சட்டசபை அங்கத்தினர்களும் எதிர்த்தும், மந்திரிகள் விரோதமாய் ஓட்டுக்கொடுத்தும் தீர்மானம் நிறைவேறியது குறித்து மகிழ்வெய்துகின்றோம். ஆயினும் சர்க்காரார் அத்தீர்மானத்தை மதித்து ஒரு சரியான கமிட்டி நியமிக்கக்கவலை யெடுத்துக் கொள்வார்களோ, அல்லது தீர்மானத்தை குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவார்களோ என்பது சந்தேகமேயாகும். எனினும் திரு பாண்டியன் அவர்களின் இம்முயற்சி போற்றத்தக்கதேயாகும்

சிக்கனம்.

கல்வி மந்திரியின் உதாரணம்.

நிர்வாக சபை மெம்பர்களும். மந்திரிகளும் தங்களுடைய சாதாரண சுற்றுப்பிரயாணத்தின் போது சலூன்களை உபயோகப் படுத்துவதற்குப் பதிலாக தற்காலிகமாக ரிசர்வ் கம்பார்ட்மெண்டுகளை உபயோகப்படுத்த ஒப்புக்கொள்ளலாமென சர்க்காரார் ஆலோசனைக்குக் கமிட்டி தனது சிபார்சுகளை அனுப்பியிருந்தது. அதற்கு கனம் கல்வி மந்திரி திவான்பகதூர் எஸ். குமாரசாமி செட்டியாரவர்கள் அடுத்த வாரத்தில் மதனப்பள்ளிக்கு விஜயம் செய்யும்போது இரண்டாவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்ய முடிவு செய்திருக்கிறார்.

தலைவர்கள் விஜயம்.

திருவாரூரில் 30-8-31ல் நடைபெறும் மாகாண சுயமரியாதை த்தொண்டர் மகாநாட்டிற்கு 29 தேதி கோவையிலிருந்து புளூமவுண்டன் எக்ஸ்பிரஸில் கோவை ஜில்லாபோர்டு உபதலைவர். எஸ். என், பொன்னையா தம் சகாக்களுடன் இரவு 9மணிக்கு ஈரோட்டுக்கு வருவார். ஈரோட்டிலிருந்து சுயமரியாதை இயக்கத்தலைவர் தோழர் ஈ. வெ. இராமசாமி தோழர் நாகம்மாள் மற்றும் நண்பர்களுடன் திருச்சி மெயிலில் திருச்சி வந்து சேர்வார்கள். அங்கு மதுரை, திருநெல்வேலி, செட்டிநாடு, திருச்சி முதலிய இடங்களிலிருந்து விஜயம் செய்யும் அன்பர்களுடன் தஞ்சைமாரணமீட்டிங்கு ஒன்று சிவகங்கைத் தாலூகா போர்டாபீஸ் கட்டிடத்தில் நடைபெறுமென்க்கள். C. நடராஜன் மாயவரம்.

சுயமரியாதை சீர்திருத்தத் திருமணம்.

விருதுநகர் திரு. எம். எஸ். பி. செந்தில்குமார் அவர்களின் குமாரர் திரு. பரமசிவம் அவர்களுக்கும், திரு. முத்துப்பெருமாள் நாடார் குமாரத்தி திருமதி நாகரத்தினம் அம்மாளுக்கும் சுயமரியாதை சீர்திருத்தத் திருமணம் விருதுநகரில் 30-8-31ல் நடைபெறும். அவ்வமயம் மணமகளுக்கு மணமகனால் சூட்டப்படும் மாங்கல்யமின்றி, தம்பதிகளிருவரும் மோதிரங்கள் மட்டும் மாற்றிக்கொள்ளுவார்கள்.

சுயமரியாதை இயக்கத்தலைவர்களிலொருவரும், உயர்திரு. ஈ. வெ. இராமசாமியும் ஷை விவாகத்திற்கு விஜயம் செய்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், இராமநாதபுரம் இராஜா அவர்களும் ஷை விவாகத்திற்கு விஜயம் செய்வார்கள். அவ்வமயம் அவர்களுக்கு, விருதுநகர் முனிசிபல் சபையாரால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்படும் என திரு எஸ். உத்தண்டன் அவர்கள் தந்தியின்மூலம் அறிவிக்கின்றார்.

சிவகங்கை.

1931-வது ஆகஸ்டு மாதம் 24-ந்தேதி திங்கள்கிழமை மாலை 4-30 மணிக்கு சிவகெங்கை தாலூகா போர்டாரவர்களின் சாதாரண மீட்டிங்கு ஒன்று சிவகெங்கைத் தாலூகா போர்டாபீஸ் கட்டிடத்தில் நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னை மாகாண சுயமரியாதைத் தொண்டர் இரண்டாவது மகாநாடு.

30—8—31 தேதி ஞாயிறன்று

திருவாரூரில் கருணாநிதி தியேட்டரில் நடைபெறும்.

கோவை ஜில்லா போர்டு உபதலைவர்

தோழர் S. N. பொன்னையா அவர்கள்

மகாநாட்டை திறந்து வைப்பார்.

தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள்.

மகாநாட்டின் தலைவர்.

திருச்சி தோழர் எஸ். நீலாவதியின்

தலைமையில் மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் தலைவர்கட்கு வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்படும்.

கே. ஏ. எம். மாணிக்கம்,

மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்துகொள்ளும் சுதந்திரம் உடையவர்களாய் இருக்கிறார்களோ அதேமாதிரி நம் பெண்மக்களும் நம் இஷ்டப்படி மறுமணம் பண்ணிக்கொள்ளும் சுதந்திரம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். இவ்விரண்டு விதங்களில் ஒன்றும் இல்லாமல் (இப்போது இருப்பது போல) கணவன் மட்டும் எண்ணிறந்த கலியாணஙகள் தன்முதன் மனைவி இருந்தபோதிலும், இறந்தபோதிலும் பண்ணிக்கொள்ளும் தகுதியோடிருக்க, அதேவிதமான தகுதியும், சுதந்திரமும் பெண்களுக்குததம் கணவன் இருந்தபோதிலும், இறந்தபோதிலும் மறுமணம் செய்துகொள்ள இலாமலிருப்பது (குறைவாகக்கூறுமிடத்து) அநாகரீகமற்ற-அநியாயமான-கொடூரமானமனிதனின் கொடுங்கோன்மையேயன்றி வேறல்ல.

இவ்வாறு பல்வேறுபட்ட மனிதனின் கொடுங்கோனமையையும் மறச்செயலையும் வெட்டி வீழ்த்தியதலே யொழிப்பான் எண்ணியே உலகத்திலுள்ள மாதர்கள் அனைவரும் பெறமுயற்சி செய்துகொண்டு வந்திருக்கின்றனர். இன்னும் காலும் செய்து வருகிறார்கள். இத்தகைய பெண்களின் விடுதலே இயக்கத்தில் நம்நாட்டு மாதர்களும் கலந்து கொள்வதன்றி முன்னணியில் நின்று தமது பிறப்புரிமையாகிய பூர்ண சுதந்திரதைத்தம்மை இதுவரை சட்டங்களின் மூலமும் சமூகத்தின் மூலமும் கலிவுறத்தி நசுக்கிவந்த ஆண்மக்களிடம் கேட்டுங்கால் யோக்கியமான எந்த ஆண்மகனுது அதைமறுக்க முன் வருதல் ஒக்குமா? 'ஐயோ! இவ்வாறு இமமாதர்களுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டால் மதம்போய்விடுமே!மானம் அழிந்துவிடுமே! ஒழுக்கம் ஓடிவிடுமே! சமூகம சீருலைந்து அல்லோல கல்லோலபட்டு அழிவு அடைந்துவிடுமே! அதனால் நம்நாடு தன் பழம் பெருமையையும் உயர்வையும் இழந்துவிடுமே!' என்று பொய்ப்புலம் பல் அழுது புன்கண்ணீர் பெருக்கும் ஆண மக்களுக்கு பெண்கள் நிச்சயமாய் இறக்கும விடையென்னவென்னவெனறால் 'இந்தியநாடு தன் பிறப் புரிமையாகிய சுதந்திரத்தைவேண்டும் போது ஆங்கிலேயர்கள் (ஐயோ உங்களுக்குச்சுதந்திரம் கொடுபோமாகில் உமது தேசதின் நலம்- அழிந்து அமைதி யொழிந்து நாசம்மிகுந்து மோசடிவினையுமே) என்று புலம்பும் போது இந்திய மகளை அவ்வாங்கிலேயர்களுக்கு என்ன பதில் அளிப்பார்களோ அதுவேதான். அந்தவிடையாவது; 'சுதந்திரம் என்பது எமது பிறடபுரிமை. அதை ஒருவரும் மறுப்பதற்கில்லே. ஒரு நாட்டினரை மற்றொரு நாட்டினர் ஆளுவதற்கு அருகரும் அல்லர். அதுநீதியுமல்ல அன்னிய ஆட்சியிலும் எங்களின் ஆபாச ஆட்சியே சிறந்தது' அதோபோன்று இந்தியப்பெண்களும் கூறுவதாவது; 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் வழக்குப்படி ஆதிகான் தொட்டு உலகத்தில் சஞ்சரிக்கும் மானிடருள் சரிபாதியான தொகையுள்ள எங்களை நசுக்கி கலிவுறுத்தி ஆண்களுக்கு ஒருநீதியும், ஒழுக்கமும், பெண்களுக்கு ஒருநீதியும், சட்டமும் ஆக்கிஎங்களை 'ஒழுக்கம்' 'மதம்' என்னும்பேர்களால் பயமுறுத்தி ஆண்டு வந்ததுபோதும். ஆண்மக்களாகிய உங்களுக்கு உலகத்தின் ஒழுக்கத்தையும் நன்மையையும் காப்பாற்றவும் பெருக்கவும் எவ்வளவு பொருப்பும் வண்மையும் உண்டோ அவ்வளவு பொருப்பும் பலனும் உங்களது தொகையைக்காட்டிலும்குறையாத பெண்மக்களாகிய எங்களுக்கும் நிச்சயமாகவுண்டு. ஆகவே ஆண்மக்களையும்பெண்மக்களையும் சரிசமமாகப் பாதிக்கும் "விவாஹம்" என்னும் விஷயத்திலும், அந்த விவாஹம் என்னும் ஒருமுறை ஒழுக்காகவும், கட்டுப்பாட்டுடனும் இருப்பதற்காக மனிதன் கண்டு பிடித்த ஒழுக்கமுறை 'கற்பு' முதலியனவற்றிலும் நாங்கள் உங்களைப்போலவே ஈடுபட்டிருக்கின்றோம். ஆகையால் நீங்கள் மட்டும் "மாமியான் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம்" என்றபடி இஷ்டம்போல் நடந்துகொள்ளத்தகுதியான சட்டங்களையும் முறைகளையும் தயாரித்து வைத்துக் கொண்டு, நாங்கள் மட்டும் இந்த விவாஹம் என்னும் உங்களது சூழ்ச்சி வலைக்குட்பட்டதுமன்றி அதினின்றும் இடையூறுகள் வந்தாலேத்தபி யோடுதற்கும் வழியில்லாமல் கிடப்பதுமிகவும் மடமையும், கொடுமையும் உடையதாகும். ஆதலால் எங்களுக்கும் நீங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் கொடுத்து விடுங்கள்."

(தொடரும்)

திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்

இச்சங்கத்தின் அவசரக்கூட்டம்ஒன்று சங்கக்கட்டிடத்தில்உபத்தலைவர் திரு சிவம் அவாகள் தலைமையில் நடைபெற்றது.

நமது மாகாண சுயமரியாதை வாலிபர் மகாநாட்டிற்கு நம் சங்க உபத்தலைவர் திரு. டி. வி. சோமசுந்தரம் B. A, B. L., அவர்களைத்தலைமை வகித்து நடத்த சகல உரிமையும் கொடுத்த வரவேற்புக்கழகத்தலைவர் திரு வாளர்கள் ஜெயராம் உயர்திருவாளர் ஈ. வெ. இராமசாமி W. P. A. சௌந்திரபாண்டியன் ஆகியவர்களுக்கு இச்சங்கம் நன்றி பாராட்டுகிறது.

இச்சங்கத்தின் புதுவருட நிர்வாகஸ்தர் தேர்தல் 16ந்தேதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகிறதினால் சென்றவருட நிர்வாகஸ்தர்களுக்கும் புது நிர்வாகஸ்தர்களுக்கும் வந்தனம் செலுத்துகிறது.

இச்சங்கததின் சேரிக்கமிட்டி ஆகஸ்ட்மீ 16ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 4-30 மணிக்கு வரகனேரி ஆதிதிராவிட சேரியைப்பார்த்து குறைகளைக் கவனித்தது. ஆதிதிராவிடர்களால் ஒரு சிற்றுண்டி நடைபெற்றது.

இச்சங்கத்தின் உபத்தலைவர் திரு. எம். எ. அருணாசலம் செட்டியாரும் காரியதரிசிமாணிக்கம்ஆகியஇருவர்களும் சுகதாக இரங்கூன் சென்றமைக்கு அவர்கள் தந்திபைப் பெற்று மகிழ்கிறது.

சமீபத்தில் லண்டன் செல்லும் சென்னை பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தலைவர் திரு. ஆரியா அவர்களுக்கு மகிழ்சி தெரிவிக்கிறது.

இச்சங்கக் காரியகரிசி டி. சி. மாணிக்கம் அவர்களின் நிர்வாகத்திற்கு நன்றிகூறி மறுதேர்தல் வரை திரு. பாலகிருஷ்ணன் அவர்களைக்காரியதரிசியாக நியமிக்கிறது. இத்துடன் கூட்டம் 8மணிக்கு முடிவடைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதைத் திருமணம்.

சாக்கோட்டை திரு. கேசவ நாயக்கர் குமாரர் திரு. கே. கணபதிக்கும், தஞ்சை திரு. சாமிநாத நாயக்கர் குமாரத்தி திரு மதி யோகாம்பாளுக்கும் 26-8-31 புதன்கிழமை காலை சுயமரியாதைத்திருமணம் நடைபெறும். அவ்வமயம் திரு. அ பொன்னம் பலனார் அவர்களும் விஜயம் செய்வார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பஞ்சமா பாதகங்கள்

எவை?

என் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணை ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து

புஞ்சைப்புளியம்பட்டி,

(கோயமுத்தூர் ஜில்லா)

கோடையிலே இவ்வுளப்பாறிக் கொள்ளும் குளிர்தரு எது?

எஸ். தருமாம்பாள் தயாரிக்கும்

சித்தர் மகா சந்தனுதித் தைலம்

கொடிய வெய்யிலாலும், அதிக வேலையாலும், இன்பநுகர்ச்சியாலும், மூளைசொதிப்புற்று அழல்கண்டதிசேகங்கட்கு இரண்டு, மூன்று ஸ்நானங்களில் உடனே குணமில்லாவிடில்பணம் வாபீஸ். வழுக்கைத்தலையிலும் கூந்தல் வளரும், கை கண்டது.

ஈ. வெ. இராமசாமிப்பெரியார் கூறுவதாவது:—

"சித்தர் மகா சந்தனுதித்தைலம் என்பது மிகவும் வாசனை பொருந்தியதாகவும், ஸ்நானம் செய்துகொண்டால் மிக்க குளிர்ச்சியைத் தரக்கூடியதாகவும், கூந்தல் வளரவும், கூந்தல் உதிர் வதைத் தடுக்கவும், தலைவலி, கண்ணோய் முதலிய சூட்டினால் உண்டாகும் வியாதிகளைத் தடுக்கவும், மிகவும் உபயோகப்படக் கூடியதாயிருக்கின்றது. தலைவாரிக் கொள்ளவும், ஸ்நானம் செய்யவும் இரண்டிற்கும் உதவும்படியான சிறந்ததைலம் இதுவே."

6 அவுன்சு 1—0—0, 12 அவுன்சு 1—14—0,
24 அவுன்சு 3—12—0

சித்தானந்த வைத்தியசாலை,
35, அண்ணா பிள்ளை தெரு, சென்னை.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

என்பது இனி ஒருநாளும் பயனளிக்கக்கூடியதாகாதென்பதே எனது அபிப்பிராயம். மதப்பிடிவாத காரணமாகவும், பிரத்தியக்ஷகாரியங்களைக் கொண்டு தக்கள் தங்கள்நாட்டையும், சமூகத்தையும் மதிக்காமல் ஆதாரங்களைக் கொண்டு தங்களைப் பெருமையாய் நினைத்துக்கொண்டு, முற்போக்கில் கவலை இல்லாமல் இருந்தாலுமே, இந்தநாடு இன்று உலக மக்கள் முன்பு மிகக்கேலிலமாகவும், இழிவாகவும் கருதப்பட்டு வருகின்றது என்பது எனதபிப்பிராயமாகும். மற்றும் இதனாலேயே பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்தநாடு அடிமைநாடாகவும், அடிமை சமூகமாகவும் இருந்துவருகின்றது என்பதும் எனது அபிப்பிராயமாகும். உலகத்தில் புத்தரைத் தங்கள் மதபோதகராகச்சொல்லிக்கொண்டு ஒரு பெரும் சமூகம், சுதந்திரத்துடன் வெகு மேன்மையாய் வாழுகின்றது. கிறிஸ்துவை தங்கள் மதபோதகராகச் சொல்லிக்கொண்டு மற்றொரு பெரிய சமூகம், சுதந்திரத்துடன் மேன்மையாய் வாழுகின்றது. அதுபோலவே முகமது நபியை தங்கள் மதபோதகராகச் சொல்லிக்கொண்டு இனியும் ஒரு பெரிய சமூகம் மிக மேன்மையாகவும், சுதந்திரமாகவும் வாழுகின்றது.

ஆனால் இந்திய சமூகம் யார் பேரைச்சொல்லிக்கொண்டாவதுஎப்போதாவது மேன்மையாக வாழ்ந்ததாகவோ, சுதந்திரமாய் இருந்ததாகவோ கதையாவது இருக்கின்றதா? காரியத்திலாவது இருக்கின்றதா? என்று பாருங்கள். என் இல்லை? புத்தர் கிறிஸ்துமுகமதுநபியாகியவர்களைச்சேர்ந்த ருத்தக்காரர்களாய் தோன்றினார்கள். அந்தந்த நாட்டு மக்கள் அப்பெரியார்களது சீர்திருத்தத்தை எற்றுக்கொண்டார்கள். நடைமுறையில் அவர்கள் வேறு எந்த எந்த விஷயங்களில் தவறுதலாய் நடந்தவர்கள் என்று சொல்வதாலும் தங்கள் தங்கள் சமூகத்தைப் பெருக்கி, எல்லோரையும் இழுத்துப் பிடித்து ஒன்றுக்கி, ஒற்றுமை உணர்ச்சியும், சமத்துவ உணர்ச்சியும், சகோதர உணர்ச்சியும் கொண்டு நடந்துகொள்ளுவதில் ஒரு வரும் தவறவே இல்லை. அந்த ஒரு காரியமே அந்தந்த சமூகத்தை மேன்மையாய் மானத்துடன் வாழச்செய்கின்றது.

நம் நாடு, நம் சமூகம் என்னும் இந்து சமூகம் இந்தக்காரியத்தில் சுத்த சூன்யநிலை அடைந்து, தனது சமூகத்தை மற்ற எல்லா சமூகத்தாருக்கும் வினியோகித்துகொண்டு கூஷ்ணதிசை அடைந்து வருகின்றது. இன்றையதினம் இந்தியாவில் 8-கோடி முஸ்லீம் மக்கள் வாழுகின்றார்கள். இனியும் வருஷ வருஷம் காலுக்கு நால் பெருகிக்கொண்டே வருகின்றார்கள். இந்த நாட்டில் இவர்கள் எப்படிப் பெருகினார்கள்? இதற்குக் காரணம் அவர்களுடைய சமத்துவ உணர்ச்சியும், சகோதர உணர்ச்சியும் அல்லாமல் வேறஎதைச்சொல்ல முடியும்? என்று கேட்கின்றேன். "முஸ்லீம்கள் பலாத்காரத்தை உபயோகித்துதகங்கள் சமூகத்தைப் பெருக்கினார்கள்" என்று சுலபமாய் சொல்லிவிடலாம். அவர்கள் அதை மறுத்தும்கூட நாம் வாஸ்தவம் என்றே வைத்துக்கொண்டாலும் அதுபோலவே இந்துக்களும் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டாம் என்று யார் தடுத்தார்கள்? எந்த மதக் கொள்கை தடுத்தது? இந்துக்களும் பலாத்காரத்தை உபயோகிக்கவில்லை என்று யாராவது சொல்லிவிட முடியுமா? புராணங்களில் சொல்லப்படும் தேவர்கள்-அசுரர்கள் சண்டையெல்லாம் சாத்வீகமா? இராமாயண, பாரத சம்பவங்கள் என்பதெல்லாம் அஹிம்சாத்தத்துவமா? சமணர், சைவர், கொலைபாதக சரித்திர மெல்லாம் அன்புமயமா? சமணரைக் கழுவேற்றிய உற்சவங்கள் பலாத்காரமற்ற தன்மையைக் காட்டுகின்றனவா? பௌத்தர் கோயில்களை இடித்து, விக்ரகங்களை உடைத்து, உறக்கி சிரேக்கம் கோவில் கட்டிய வைணவ சமய உண்மைகள் என்பனவை எல்லாம் சமரச சோக்கமா? என்பன வற்றை யோசித்துப்பாருங்கள். இப்படியெல்லாம் இருந்தும் என் இந்து சமூகம் பெருகவில்லை—மேன்மையாக வாழவில்லை -- மானத்தோடு பிழைக்க முடியவில்லை? இந்திய நாடு மாத்திரம் அடிமை நாடாக வெகுகாலமாகவே இருந்து வரக் காரணம் என்ன? என்பவை களையோசித்தால் உண்மை விளங்காமல் போகாது.

ஒரு மதம் அந்த மத மக்களை 'மோட்ச லோகத்திற்கு அழைத்துச்செல்கின்றது அங்கு அவர்களைக் கடவுளிடத்தில் உட்கார வைக்கின்றதா?' என்பதல்ல எனது மத சம்பந்தமானகவலை. மற்றென்னவென்றால் ஒரு மதம், அந்த மத மக்களை மானத்தோடு, சுதந்திரத்தோடு, சாந்தியோடு வாழச்செய்கின்றதா? என்பதுதான் எனது கவலை.

இந்த நாடு விடுதலை பெறுவதற்கு இந்நாட்டு மதமும், சமூகமுமே முக்கிய காரணங்கள் என்றுதான் சொல்லியாக வேண்டும். மக்கள் யாவரும் ஒரு சமூகமாய், ஒரு மதமாய், ஒரே சகோதரத்துவமுள்ளவர்களாயில்லாத நாடு ஒரு காலும் உண்மையான விடுதலையைப் பெறமுடியாதுஎன்பதைமறந்து விடாதீர்கள்.

இந்திய நாடு என் ஒரு சமூகமான, சகோதரத் தன்மையான நாடாகயிருக்கவில்லை? என்பதையோசித்துப்பாருங்கள். முக்கியமாய் மதங்களின் மூட்டுக்கட்டைகளே அல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லக்கூடும்?

சகோதரத்தன்மையும், சமத்துவமும் முள்ள கொள்கையை என் எல்லோரும் தழுவக்கூடாது? இதற்குப் பெயர் இந்துமதம் என்பதாய் இருந்தாலென்ன? இஸ்லாம் மார்க்கம் என்பதாய் இருந்தாலென்ன? வேறு என்னவாய் இருந்தாலென்ன? சகோதர மார்க்கம், சமத்துவ மார்க்கம், ஒற்றுமை மார்க்கம் என்பதாக உள்ள எதையும் அறிவுள்ளமனிதன் ஏற்றக்கொண்டே ஆகவேண்டும்.

இந்த மூக்கியத்தத்துவங்களைவிட்டு விட்டு மார்க்கம் என்றால் கடவுளை அடைவதென்றும், வெறும் வேஷம் என்றும் மாத்திரம் நினைத்துக்கொண்டு மக்கள் ஒருவருக்கொருவர் விருப்பு, வெருப்பைக் காட்டுகின்றது அறிவீனமேயாகும். இந்தக்காரணங்களால்தான் நல்ல பயனளிக்கும் மார்க்கங்கள்கூட பெருக்கமடையாமல் போகின்றன.

ஒரு மனிதனைப் பார்த்து வேஷமாத்திரத்தினால் இன்ன மதக்காரன் என்றுசொல்லிவிடக்கூடியதாய் இருந்தால்—தன்னை இன்ன மதக்காரன் என்று காட்டிக்கொள்வதற்கு இந்த வேஷமேபோதும் என்று நினைப்பதாயிருந்தால் அது ஒரு காலும் நல்ல—பயனளிக்கக்கூடிய மார்க்கம் என்று சொல்லிவிட முடியாது.

இஸ்லாம் மார்க்கம் மேன்மையான மார்க்கம் என்றால் அது இந்தியாவின் மனித சமூகம் முழுவதையும் தன்னுள் அடக்கிக் கொள்ளவேண்டும். அதற்கு மூட்டுக் கட்டைகளாய் இருப்பவைகளை ஒழிக்க முயற்சிக்க வேண்டும். மத சம்பந்தமான பழக்க வழக்கங்கள், வேஷங்கள் என்பவைகள் எல்லாம் ஒழியவேண்டும். பகுத்தறிவுக்கு எற்ற எந்தக் காரியத்தையும் செய்ய சுதந்திரமிருக்கவேண்டும்.

மக்களிடத்தில் அன்புவைத்துசகோதரத்தன்மை காட்டி அன்பு உண்மை என்பவைகளினிடத்தில் நம்பிக்கை வைத்து மனிதர்கள் எல்லோரையும் சமம் என்று கருதிக்கொண்டு மனித சமூகத்திற்கு சேவை செய்வதே தன் கடமை என்று நினைத்துக்கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் இஸ்லாம் மார்க்கக்காரர்கள் என்று சொல்வதாலும் என்னையும் மற்றும் என் நண்பர்கள் பலரையும், இஸ்லாம் கொள்கைக்காரர்கள் என்று தாங் முஸ்லீகள் என்ன வேண்டுமே யொழிய தாடியையும், தலையையும், உடையையும் பார்த்து இஸ்லாம் என்றும், இஸ்லாம் அல்லாதவன் என்றும் பிரிப்பதாய் இருக்கக்கூடாது துருக்கியில் வேஷமாத்திரத்தில் மதம் இல்லை. அதுபோலவே இந்தியாவிலும் வேறுபாட்டை பார்வையிலாவது மறையும்படி மக்கள்எல்லோரும்முதலில் ஒரே மாதிரியான உடை, உடை, பாவனையாகவேண்டும். பிறகு எண்ணங்களைப்பறிமாரிக்கொள்ள வேண்டும். பகுத்தறிவுக்குப் பொறுத்தமான கொள்கைகளையே மனித வாழ்க்கைக்குமார்க்கங்களாக எற்றுக் கொள்ளவேண்டும். இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கமென்றும், பகுத்தறிவின் பரீட்சைக்கு விட்டு அதன்படி நடக்கத் தயார் என்றும் முஸ்லீம்கள் இன்றுதைரியமாய்ச் சொல்லுகின்றார்கள். அந்தப்படி சொல்ல மற்ற மார்க்கக்காராகளுக்கு என் தைரியமில்லை? எனெனில், திரு. முகமது நாபி சமீபகாலத்தில் தோன்றி சமீபகாலத்தில் எற்படுத்திய கொள்கைகள் அனைத்திலும் அநேக விஷயங்களில் அது பகுத்தறிவுக்கு நிதர்சனமாக யோசியதை புடையதாய்இருக்கின்றது.

ஆகவே முஸ்லீம்கள் பகுத்தறிவுக்கு விரோதமாய் எதாவது இருந்தால் அது தங்களது மார்க்கக்கட்டளை அல்ல என்று தள்ளிவிடவும் அவற்றை நீக்கிவிடவும் பகுத்தறிவுக்காரர்களெல்லாம் தங்கள் சகோதரர்கள் என்றும், இல்லறம் என்றும், சொல்லவும் தயாராயிருக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல் அவர்கள் தங்கள் சமூகம் என்றும், அன்னிய சமூகம் என்றும் வித்தியாசம் பாராட்டக்கூடாது. எல்லோரையும் பகுத்தறிவு மார்க்கமாக ஆக்க முயற்சிக்க வேண்டும். உலகமெல்லாம் ஒரே மார்க்கமாவதற்கு-பகுத்தறிவு மார்க்கமாவதற்கு முஸ்லீம்கள் பாடுபடவேண்டும். அவர்களுக்கே அதிக சௌகரியமிருக்கின்றது. ஆதலால் அதுவே உலகமத போதகர் என்று சொல்லப்படும் திரு. முகமதுநபி அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாகும். இதுவே அவரது பிறந்தநாளான இந்த முக்கியமான நாளில் நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மையாகும்.

'மதங்கள் ஒழிந்த பிறகுதான்உலக சமாதானமும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படமுடியும்' என்பது அநேக அறிஞர்களது அபிப்பிராயமானாலும், அதற்கு விரோதமாக எதாவது ஒரு மதம் இருக்கும் போது 'உலக சமாதானம் ஏற்பட்டு விட்டது" "சாந்தி ஏற்பட்டு விட்டது" என்று சொல்லப்படுமானால் அது இஸ்லாம் கொள்கைகளாகத்தானிருக்கக்கூடும் என்றுகருதுகின்றேன். ஏனெனில் அது சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் ஆகிய காரியங்களில் உலகில் மற்றெல்லோரைக்காட்டிலும் அதிக மானக்கலை எடுத்து வருகின்றது.

துருக்கியையும் ஆப்கானிஸ்தானத்தையும்பார்க்கும்போது அவைஎவ்வித சீர்திருத்தத்தையும் எற்றுக்கொள்ளத்துணிந்து தயாராயிருக்கின்றதாகவே காணப்படுகின்றது.

ஆகவே இந்திய முஸ்லீம்களும் அனைத்துப்பின்பற்றினால் இஸ்லாம் கொள்கைகள் உலகக்கொள்கைகளாவதில் எவ்வித கஷ்டமும் இருக்காதென்றே கருதுகிறேன் என்பதுவாகப் பேசினார்.

பிறகு அக்ராசனர் முடிவுரை கூறியதும்ஜனப் சி. கே. முகமதுயாசூப் சாயபு அவர்கள் வந்தேமாதரம் சொல்ல எல்லோருக்கும் மாலையிட்டு, சந்தனம், கற்பூரம், புஷ்பம் வினியோகித்தார்கள். அன்று இரவு 2000 பேர்களுக்கு மேன்மையான ஒருவிருந்தளிக்கப்பட்டது.

———

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்து, குண்டு முதலாகியவை களையும் சென்ற யுத்தத்தில் அவைகள் ஏராளமாக உற்பத்தி செய்து கொண்டு வந்த விஷயமானது நாம் யாவருமறிந்ததேயாகும்.

ஆகையினால், யுத்த காலத்திலாயினும் சரியே, அல்லது சமாதான காலத்திலாயினும் சரியே தன்னைத்தானே முன்னியர்களின் படையெடுப்பினின்றும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென விரும்பும் இந்தியாவுக்கு, விஞ்ஞான சாஸ்திரத்திலும், இயந்திர முறைமைகளிலும் தக்கத் தேர்ச்சியும், அனுபோகமும் பெற்றமக்களும், ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள மக்களும் அதன் புழக்கடையிலவசியமிருந்து தான் தீர வேண்டுமென்பதுமிக்க இன்றியமையாததாகின்றது மேலும், ரசாயன சாஸ்திரத்திலும், சடத்துவசாஸ்திரத்திலும், இயந்திரத்தொழிலிலும் அதன் பிரிவுகளைச்சார்ந்த சாஸ்திரங்களிலும் வெடி மருந்துகளை உற்பத்தி செய்வதைக்குறித்துப் போதிக்கும் சாஸ்திரங்களிலும், யுத்த முறைகளை ரசாயன சாஸ்திரப்படிக்கையாளுவதிலும் மிக்கத்தேர்ச்சியும், அனுபோகமும், பழக்கமுமடைந்த மக்களும் கண்டிப்பாயிருக்கவேண்டியதுடன், ஆபத்துக்காலங்களில் அரசாங்கத்திற்குப் போதிய அளவு யுத்தசாமக்ரீதிகளை தயாரித்து, பிரயோஜனப்படும்படி செய்வதற்கும் போதுமான தளவாடங்களும், கருவிகளும், உபகரணங்களுமிருக்க வேண்டியதும் மிக்க அவசியமாகின்றது. யுத்தகாலங்களில்தான் இவைகளியாவும்நமக்கு மிக்க அவசியமெனவும், இன்றியமையாததெனவும் தெளிவாகக்காணப்பட்டபோதிலும்கூட, சமாதானத்தை நாம்நாடி, விரும்புகின்ற காலத்திலுங்கூட அவைகளை ஆராய்ச்சிசெய்து, பரீக்ஷிக்கவேண்டியதும் முக்கியக்கடமையாகின்றது. ஒரு தேசத்தின் செல்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் ஸ்ரீமதி லோவதி யம்மையார் அவர்களின் மணிவாக்கு பலிக்குங்காலம் வந்துவிட்டது. சயமரியாதைச் சுடரோங்கி, சமத்துவ, சமதர்மங்காணும் காலமும் கிட்டிவிட்டதென்பதையும் "எய்த்துப்பிழைத்தவினிப்பலியா" தென்பதையும் தெரிவித்துக்கொண்டு இத்துடன் இக்கட்டுரையை முடித்துக்கொள்கிறேன்.

வருணாச்சிரம மென்பது
வாழ்வைக்குலைப்பது.
அடிமை பயப்பது.

வாக்கைக்கொண்டுதான் அத்தேசத்தின் வல்லமையும், அதிகாரமும் மதிக்கப்பட்டு அதிகமாகக் கூடும். இயந்திரங்களைக்கொண்டு சாமான்களை உற்பத்தி செய்யவும், ஒழுங்காகவும் உபயோகப்படுத்தினால்மட்டுந்தான், நாம் தற்கால நிலைமையில்செல்வத்தை அதிகரிக்கவும், விருத்தி செய்யவும், பெருக்கவுமுடியும். பூர்வகாலப்பொருளாதார சிக்கன முறைமையை யனுசரித்தும், அதைத்தழுவியும் ஸ்தாபிக்கப்படும்'இராமராஜ்ய' த்தில், மக்களால் விரும்பக்கூடிய தெனவும், அவர்களுக்கு அவசிய மானதெனவும்,மிக்கஇன்றியமையாததெனவும் கருதப்படும் இப்பலனையும், காரியசித்தியையும் நம் எவ்வாறு அடைய முடியும்? யுத்தகாலத்திலாயினும் சரி, அல்லது சமாதானக்காலத்திலாயினுஞ் சரியே தற்காலத்திய விஞ்ஞான சாஸ்திரங்களின் பலனை நாமடைந்து, அனுபவித்து வந்தாலொழிபவும், மேலும இயற்கையன்னது தனக்குள் இரகசியமாக அடக்கியும் ஒளித்தும் வைத்துக்கொண்டிருக்கும் படியான விஷயங்களை நம் அறிந்துகொள்ள ஆவல்கொண்டு சதாகாலமும் தேடிக்கொண்டிருந்து கொண்டும் வந்தாலொழியவும் மக்கள் மானமுள்ள வாழ்க்கையை நடாத்துவதென்பதானது ஒருக்காலும் சாத்தியமாகவேயாகாது.

(தொடரும்)

நாகபட்டணம்.

சுயமரியாதைச்சங்கம்.

16—8—31 மாலை 6 மணிக்கு சங்க அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் திரு. துருகையா அவர்கள் தலைமையில் கூடியது. அது சமயம் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாய்நிறைவேறியது.

நாகை தாலூகா சுயமரியாதை மகாநாட்டிற்கு 20 பேர்களடங்கிய வரவேற்புக்கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டதுடன் வரவேற்புக்கமிட்டித் தலைவராக உயர்திரு. எம். கே. குப்புசாமி அவர்களைக்கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரும் அன்புடன் இசைந்துளார்.

மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க உயர்திரு. வ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி. அவர்கள் அன்புடன் இசைந்தது பற்றி இக்கூட்டம் தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது என்ற தீர்மானம் நிறைவேறியபின் முடிவுரை கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்ததென காரியதரிசி எஸ். பி. கிருஷ்ணன் எழுதுகிறார்.

பிழைதிருத்தம்.

16-7-31ல் வெளியான 'குடி அரசு' 8ம் பக்கத்தில் மகாநாட்டுத் தலைவர் திரு. ஆர். கே. சண்முகம் அவர்களுக்கு விருதுநகர் முனிசிபாலிட்டியார் வாசித்துக்கொடுத்தஉபசாரப்பத்திரத்தின்போது விஷயம்செய்திருந்த டிப்டிகலெக்டர் பெயர் தவறுதலாக விசுவநாதம் என்றிருப்பதை பி. என். இராமசாமி ஐயர் எம். ஏ, ஐ. சி. எஸ். என்று திருத்தி வாசித்துக்கொள்ள கேட்டுக்கொள்ளுகிறோம். (ப-ர்)

கமுதி யூனியன் வரி கொடுப்போர் கூட்டம்.

10-8-31 தேதி மாலை 6 மணிக்கு கமுதிமேட்டுத்தெரு மொழக்கொட்டுமைதானத்தில் கமுதி திரு. கே. ஆதிமூலம் சேர்வைக்காரர் அவர்களின் தலைமையின் கீழ் ஓர் பெரிய பொதுக்கூட்டம் கூடியது. அதில் அநேக பிரமுகர்கள் "கமுதி (யூனியன்) பஞ்சாயத்து போர்டும, அதன் நிர்வாகமும்" என்னும் விஷயமாகப் பேசி பல தீர்மானங்கள் நிறைவேற்றியபின் கூட்டம் இனிதுகலைந்தது. கூட்டத்திற்கு சுமார் 1500 பேர் வரை கூடி இருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

அறந்தாங்கி.

சுயமரியாதைச்சங்கம்.

5-8-31 மாலை 5 மணிக்கு திருவாளர் எ. . டி. திருமலையப்பா தலைமையில் ஒரு வாராந்திரக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் நமது சங்க அங்கத்தினரும்இரையேன் பட்டி வாசியுமாகிய உயர்திரு. எ. நடராஜனுக்கும் திருமதி வேலுக்கும் பலமான எதிர்ப்புகளுக்கிடையே பார்ப்பன புரோகிதமன்னியில் அறவே மூடச்சடங்குகளை யொழித்து சுயமரியாதை முறையில் 6-7-31ல் திருமணம் நடத்திக்காட்டிய இளஞ்சங்கத்தின் ஆர்வத்தையும் ஆற்றலையும் முழுமனதுடன் நமது சங்கம் பாராட்டுவதுடன் இன்னும் மற்றசங்க இளைஞர்களும் இயக்க அபிமானிகளும் நமது தாலூகாவிற்கே முதன் முதலாக வழிகாட்டிய அன்னாரைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்ற தீர்மானத்தை காரியதரிசி ஈ. செல்லையா அவர்கள் பிரேரேபிக்க ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு இரவு 7 மணிக்கு வந்தேமாதரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றதென காரியதரிசி எழுதுகிறார்.

திருச்சி பார்ப்பணாலாத வாலிபர் சங்கம்.

இச்சங்கத்தின் உபதலைவர் எம். எ. அருணாசலம் செட்டியார் அவர்களும் காரியதரிசி டி. சி. மாணிக்கம் அவர்களும் ரங்கூன் சென்றதால் அவர்களுக்கு 7-ந் தேதி டி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்களால் ஒரு சமபந்தி போஜனம் நடத்தப்பட்டு மாலை திரு. டி. வி. சோமசுந்திரம் அவர்களாலும் தென்னிந்திய கல உரிமை சங்கக்காரியதரிசி திரு. டி. பி. வேதாசலம் அவர்களாலும ஒரு சிற்றுண்டி விருந்து கடைபெற்று அன்று இரவு சென்னை செல்லும் போட் மெயிலில் பிரயாணப்பட்டார்கள். பல வாலிபர்களாலும், பல சங்கக் காரியதரிசிகளாலும் மாலையிடப்பட்டு வண்டி புரப்பட்டதுஎன ஒரு நிருபர் எழுதுகிறார்.

பிராமணீயம் ஒழிந்த திதி.

வட ஆற்காடு ஜில்லா செய்யாறு தாலூகா புதுப்பாளையம் மிராசுதாரர் திரு. ஏ. எஸ். தங்கவேலு முதலியார் அவர்கள் தமது தந்தையார் திதியை 2-8-31ல் பிராமணீயம் ஒழித்து சுத்த சுயமரியாதை முறையில் நடத்தினரென ஒரு நிருபர்எழுதுகிறார்.

நோட்டீஸ்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

1928-வது அசல் நெ. 1117
1930-வது E. P. R. நெ. 2178.

ந. மு. அ. முத்தளகுஞ் செட்டியார்—வாதி

பல்லடம் தாலூகா கோட்டங்கி பாளையம் கிராமம் மஜரா காரணம் பேட்டையிலிருக்கும் காளியப்பகவுண்டன் மக்கள் நஞ்சப்பகவுண்டன், 2 மாரப்ப கவுண்டன், 3 சின்னி கவுண்டன், 4 பழனிச் கவுண்டன் 5—2 to 5 பிரதிவாதிகள்.

ஷெ 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு:— ஷெ நெம்பரில் வாதி ஜப்தி சொத்துக்களின் விற்பனைக்காக மனு செய்து கொண்டிருக்கிறபடியால் விற்பனை இல்லியபின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1931-வது செப்டம்பர் மாதம் 10 தேதி வாய்தாப் போடப்பட்டிருக்கிறது என்று இதனால் உங்களுக்குத் தெரிவிக்கலாகிறது.

திருப்பூர் 15-8-31 } (Sd) S. Ganapathi Iyer M.A., B.L., வாதி வக்கீல்,

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஐகோர்ட் ஜட்ஜ்கள் எழுதியது.

டாக்டர் ஸர். எஸ்.

சுப்ரமண்ய ஐயர் கே. டி. சி. ஐ. இ.

பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் தமிழ் வைத்தியசாலையில் தயாரிக்கப்படும் மகா சந்தனுதித்தைலத்தை எங்கள் குடும்பத்தில் உபயோகித்து மிக நன்மை அடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்ல குணமும் செய்கிறது. நெடுநாளாக அத்தைலத்தையே உபயோகித்து வருகின்றோம். அவருடைய மற்ற மருந்துகளைப் பலரும் உபயோகித்து நலமடைவதாகத் தெரிகிறது.

ஐகோர்ட் ஜட்ஜியாயிருந்தவரும்,
இந்திய அரசாங்க நிருவாகசபை அங்கத்தினராயிருந்தவரும்,
ராயல் கமிஷனில் இந்திய மெம்பருமாகிய,

சர். சி. சங்கரன் நாயர் சி. ஐ. இ.

பண்டிட் ஆனந்தம் அவர்களின் வைத்தியசாலையில் செய்யப்படும் பற்பொடியை நான் உபயோகித்து வருகின்றேன். அதனால் எனக்கு மிக நன்மை உண்டாகிறது. அவருடைய மகாசந்தனுதித்தைலம் எனது குடும்பத்தில் உபயோகப்படுகிறது.

ஐகோர்ட் ஜட்ஜ்,

டி. வி. சேஷகிரி ஐயர்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சந்தனுதித்தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணுகிறது.

ஐகோர்ட் ஜட்ஜ்,

சர் டி. சதாசிவ ஐயர்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் புகழ்பெற்ற பரம்பரை மருத்துவ குடும்பத்தினர். இவருடைய மருத்துவசாலையில் செய்யப்படும் மருந்துகளில ஜீரணி லேகியம், மகா சந்தனுதித் தைலம், கல்கார் பற்பொடி, முதலியவைகளை நானும் எனது குடும்பத்தினரும் உபயோகித்து அதன் குணத்தைப்பற்றி மிக மகிழ்ச்சியடைகின்றோம். இவர் நமது நாட்டு மருத்துவத்தை முன்னேற்றவும், மருத்துவத் தொழிலுக்குரிய மருத்துவ வகுப்பினர்களை நல்லமருத்துவர்களாக்கவும் மிகப்பாடுபட்டு வருகின்றார்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின், மகாசந்தனுதித்தைலம்.

24 அவுன்சு ரூ.3-12-0. 12 அவுன்சு ரூ.1-14-0.
6 அவுன்சு ரூ. 1-0-0. மாதிரிபுட்டி 0-3-0.

பண்டித S. S. ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலை,

221, தங்கசாலை வீதி, சென்னை.

தந்திவிலாசம்:-
"மருத்துவன்"
சென்னை

டெலிபோன்
நெ. 2584.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 10. (பத்து)

கிடைக்குமிடம்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

தனிமனிதனின் தோழன்.

"புதுவை முரசு" மகாநாட்டு மடல்

புதுச்சேரியில் இருந்து வெளிவரும் 'புதுவை முரசு' பத்திரிகாலயத்தார் விருதுநகர் 3-வது சுயமரியாதை மகாநாட்டுக்காக வெளியிட்ட விசேஷ அனுபந்தம். தலைவர்படங்களும், வேடிக்கை சித்திரங்களும், இயக்கத் தலைவர்களாலும், அறிஞர்களாலும், பெண் மணிகளாலும் எழுதப்பட்ட பல அறிய கட்டுரைகளும், வேடிக்கை விநோதங்களும், கர்ப்பனைகளும், பாட்டுகளும், சம்பாஷணைகளும் கொண்டது. 130-பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம்.

விலை அணா 0—6—0

கிடைக்குமிடம்:—

"புதுவை முரசு" புதுச்சேரி.

அயர்லாண்ட் குதிரைப்பந்தய லாட்டரி டிக்கட்டுகள்.

மான்செஸ்டர் நவம்பர் கேண்டீகேப் (நவம்பர் 1931)

மொத்தமாகக் கொடுப்பது:- 100,000 பவுன் சென்டெர்பி பந்தயத்தில் குறிப்பிட்ட தொகைக்குப் பங்குகள் அதிகரித்துவிட்டது. டிக்கட் 1-க்கு ரூ. 7-8-0. டிக்கட்டிற்கு பணம் 8-10-31 வரைபெற்றுக்கொள்ளப்படும்.

டிக்கட் கிடைக்குமிடம்:-

எஸ் கே. வரதராஜலு, ஏஜண்ட், திருச்செங்கோடு S.I.

கெந்தகமே—இந்துயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் தர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி தெளமாகி, (இறத்தம் முறிந்த சீழ்) வெளியாகும் 217 விதமான வெட்டை வியாதிகள், 21 விதமான கிறந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மற்மஸ்தான கொருக்கு, தெணம், புத்துவகைகள், தொண்டைத்தாரு, அண்டப்புத்து, பொத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, கூயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவெலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிறந்திபும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினுலோ, அகால போஜனத்தினுலோ அன்னதவே சமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு ஏற்பட்டு ஜெனிக்கும் வியாதிகளை 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தை ஊட்டி முருக்கேற்றும் வல்லமை புடைய தோழன். (உந்தி குளிர) கர்ப்ப தெணவுகளை ஆற்றக் கூடிய கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பார்சில் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். பி. ஏ. எதிராஜ்,

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வெட்டிக்குவரும் பார்ப்பனனும் சமயலறைக்குள் புகுந்து சாப்பிட்டு பால், தயிர், நெய் முதலிய விசேட பதார்த்தங்களையும் அதிகம் தின்று, வந்த விருந்தாளிகளுக்குப்போதாமல் செய்து அரைகுறையாய் உண்ணுகையில் விருந்தாளிகள் வெட்கப்பட்டு சமயற்காரப் பார்ப்பனன் எஜமான் எஜமானிபேரில் குற்றம் சொல்ல உபசரித்தமனிதன்பேரில் விருந்தாளி அருவையகொள்ள, அதற்குப்பின் ஆசாரத்தில் ஆசனத்தின்பேரில் அழகாய் அடிக்கிவைக்கப்பட்ட வெற்றிலையில் முகவெற்றிலையையும் முன்னடியே எடுத்துப் போட்டுக்கொள்ளும் பார்ப்பனனின் ஆதிக்கத்திலிருந்து மலையாளத்தில் எந்த நாயர் பெண்ணைக் கண்டாலும் அவளோடு சிநேகமாக விருக்க நம்பூதரிப்பார்ப்பனன் ஆசை கொண்டால்அதற்கு இசையவேண்டும். அதற்கு இசையாவிட்டால் பாவம் வந்துவிடுமென்று நினைக்கு நம்நாயர் குடும்பங்கள் இன்னும் மலையாளத்தில் அநேக மிருப்பது வரையிலும் உள்ள ஆதிக்கங்களுக்கெல்லாம் இராமாயண உற்பத்திக்குச் காரணமான கதையே ஆதாரம். பத்தவருஷத்திற்குமுன் மலையாளத்திலுள்ள ஒரு கிராமக் குளத்தில் இரண்டு உத்தியோகஸ்தர்களின் மனைவிகளான இரண்டு ஸ்திரிகள் குளித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது மல மூத்திரத்தைவிட்டு சுத்தம் செய்துகொள்ள குளத்திற்கு வரும் ஒரு நம்பூதரிப்பார்ப்பனன் உடையை சுருட்டிக்கட்டி, ஆண் குறியை இடது கையில் பிடித்துக்கொண்டு, பெண்கள் குளிக்கும்இடத்தண்டை வந்து காண்டிருந்தான். அந்த நம்பூதரிப்பார்ப்பனனை உத்தியோகஸ்தனின் மேலையாள் "பெண்கள் இருக்குமிடம் போகாதே" என்று தடுத்தான். நம்பூதரி மீறிப்போனான். தடுத்தவன் தள்ளினான். உடனே நம்பூதரிக்குக் கோபம் வந்து அந்த ஊருக்கு ஜென்மியான (ஜென்மி என்றால் ஊர் நிலத்துக்குச் சொந்தக்காரன்) நம்பூதரிப்பார்ப்பனனிடம் போய்ச் சொன்னான். தள்ளப்பட்ட நம்பூதரி, ஆட்டிய நம்பூதரி. ஆட்டிய நம்பூதரியென்றால், நம்பூதரிப் பார்ப்பார்களுக்குப் புரோகிதன். உடனே ஜென்மிக்குக் கோபம் வந்து அந்தப் பெண்கள் குடியிருக்கும் ஊரைக்காலி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டான். ஊரார்பயந்து நம்பூதரியிடம் போனார்கள். அந்த இரண்டு பெண்களுடை தலைக்கு 25 ரூபாய் வீதம் குற்றம் கொடுத்து நம்பூதரியை நமஸ்காரம் செய்யவேண்டுமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. அப்படியே அந்தப் பெண்கள் குற்றம் கொடுத்து நமஸ்காரம் செய்தார்கள். இதுதான் ராமராஜியம். ராமராஜியமுண்டானதற்கு எழுதப்பட்டிருக்கும் காரணமே இதற்கு ஜீவாதாரம். மலையாளத்தை விஷ்ணு ராஜியமென்பதும், பரசுராமனால் உண்டுபண்ணப்பட்டு காசிபனுக்கு தானம் கொடுத்து காசிபன் பிராமணர்களுக்குத்தானம் கொடுத்தான் என்கிற கதைகளோச் சேர்த்துக் கொண்டதும் ராமராஜியத்திற்கு காரணம் சொல்லப்பட்ட கதையை நிச்சயப்படுத்திக்கொள்ளவே யாகும்.

ஆசைவர்களால் எழுதப்பட்ட இராமாயண மூலக்கதைகள் விஷ்ணுவை தாழ்மைப்படுத்த எழுதினவை என்றும், தேவாரமென்னும் சைவமே தத்தில் இராமாயணம் வருவதால் சைவன் சொன்ன இராமாயண மூலக்கதை ஆபாசமுடையது யென்பதை குறுகிய மனம் அவர்களுக்கு எடுத்துக்காட்டவில்லை. இந்த இரண்டு கதைகளால் கட்டப்பட்ட இராமாயணத்தின் ராமராஜியதால் கடமையும், நியாயத்தையும் எப்படி நிலைநிறுத்த முடியும்?

உலகோபகார்த்தமாக மகாவிஷ்ணு பூலோகத்தில் ராமராக அவதாரம் செய்து மனிதர்களுக்கு நடந்து காட்டினார் என்பதற்கு ஒரு சிறிதுமிடமில்லை. எப்படியெனில் விஷ்ணுவும், இலட்சுமியும் நிர்வாணத்தோடிருப்பதைப் பார்க்கப்போன ரிஷிகளைத் தடுத்த காவற்காரர்களுக்குக்கிடைத்த கூலியான சாபத்தைத் தீர்க்கப் பூலோகத்திற்குப் போனதாகவும், அன்னியன் பெண்ஜாதிக்கு ஆசைப்பட்டுசெய்தவுக்கிரமத்திற்காகபெற்றசாபத்தை அனுபவிக்கவும், பூலோகத்தில் மகாவிஷ்ணு மனிதனாக அவதாரம் பண்ணினார் என்று தானே வைணவ, சைவ சித்தாந்தங்கள் சொல்லுகின்றன. இதில் தெரிந்துகொள்ள வேண்டியது தானென்ன விருக்கிறது? ஆணும், பெண்ணும் அம்மனத்தோடிருக்கும் அறையில் பிராமணன் போனால் தடுக்கப்படாதென்பதும், தடுத்தால் சாபம் உண்டாகுமென்பதுமொன்று. செத்துப்போன உடலில் பிரவேசித்து அவன் பெண்ஜாதியின் கற்பைக் கெடுத்தால் அவள் தெரிந்து சாபம் கொடுப்பாள் என்பது இரண்டு. இவை இரண்டும் விஷ்ணு உலகத்திலும் ரிஷிகளிடையிலிருந்தாலும் நமது மனித நாட்டில் இங்கிலீஷ் அரசாங்கத்தில் தடுக்கப்பட்டு, மீறினால் தண்டனையும் உண்டாயிருக்கிறதே. இதற்கு எந்த ராமராஜியமும் தேவையில்லை இதுவரையிலும் ராமராஜியம் பூலோகத்தில் வருவதற்குள்ள காரணதையைச்சொன்னேன். இனிமேல்பூலோகத்தில் நடந்ததாகச் சொல்லும் ராமராஜியத்தைச் சொல்லுகிறேன். (தொடரும்)

சென்னைத் துறைமுகத் தொழிலாளர் சங்கம்.

சென்னை சங்கத்தின் முதல் ஆண்டு விழாவானது சங்கத்தலைவர் திரு. பி. சிவராவ் எம். ஏ. அவர்களின் தலைமையில 1, 2-8-31யாகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொண்டாடப்பட்டது. திரு. எம். எஸ். கோடீஸ்வரன் அவர்கள் பி. ஏ., எல். டி., சென்னை விழாவின் வரவேற்புக்கழகத் தலைவராவர்.

மதிப்புரைகள்.

மதவிசாரணை.

'மதவிசாரணை' என்னும் புஸ்தகம் ஒரு அருமையான புஸ்தகமாகும். இது ஞானசூரியனை எழுதிய ஆசிரியர் சுவாமி சிவானந்த சரஸ்வதிஅவர்களால் எழுதப்பட்டதாகும்.

இதில் வேதத்தில் பார்ப்பனரல்லாதாரைப் பற்றி இருக்கும் சுலோகங்களைப்போட்டு விளக்கியானமும், மற்றும் அதில் காணப்படும் ஆபாசமும், யாகங்களின் இரகசியங்களும், அவைகளின் பிரிவுகளும், இராகூதர் என்பதின் இரகசியமும். ஸ்மிருதிகளின் ஆராய்ச்சியும், புராணங்களின் ஆராய்ச்சியும், நால்வர் இரகசியமும், படைப்பைப்பற்றியஇரகசியமும், இந்துப்பெண்கள் நிலைமையும்விவரிக்கப்பட்டிருக்கிறது. மதங்களைப்பற்றிய ஆராய்ச்சிசெய்து உண்மை அறிய முயற்சிபவருக்கு இப்புத்தகம் ஒரு விஷயக்களஞ்சியமாகும். இந்து மதத்திலுள்ள சகல பிரிவு சமயங்களைப்பற்றிய ஆதாரங்களையும் ஆராய்ச்சி செய்து அவரது அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எவ்வித அபிப்பிராயமுடையவரும் இப்புத்தகம் வாங்கிப்படித்து அவைகள் சரியா? தப்பா? என்பதை அறிய வேண்டியது அவசியமாகும். டிம்மி சைசில் 235 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் விலை ரூ. 1. மிகமிக சரசம்.

கிடைக்குமிடம்:—

D. V. அருணாசலம்,
தேவகோட்டை.

அசோகா பாக்குத்தூள்.

கோவை திரு எம். கே. கிருஷ்ண செட்டியார் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட 'அசோகா பாக்குத்தூள்' சிறிய பொட்டணங்கள் அடங்கிய பாக்கட் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. அது மிகவும் வாசனையாகவும் பார்வைக்கு இரம்மியமாயும் உபயோகிக்க அதிக உருசியாகவும்இருக்கிறது. உயர்ந்த ரகம் லவங்கசருள் பாக்கிலும் செய்தது. விலை 100-பொட்டணம் 0—5—0. 'பெட்டியில் பேக் செய்தது 0—5—6.'

கிடைக்குமிடம்:-

M. K. கிருஷ்ண செட்டி,
12|293 வைசியர் வீதி,
கோயமுத்தூர்.

மாதர் சுதந்திரம் அல்லது பெண்மக்கள் பெருமை.

மேல்கண்ட பெயரைக் கொண்ட புத்தகம் ஒன்று பண்டிதர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பட்டு திருமதி சி. சிவகாமி அம்மையாரால் வெளியிடப்பட்டது நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இதில் பெண்களின் சுதந்திரத்திற்காதாரமான அநேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றதுடன் அவை இல்லாமல் போனதற்குக்காரணங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, பெண் மக்களும், அவர்களது வைதிகம், பிறவிக்குணம், கற்பு, வலிமை, கல்வி, மணம், சொத்துரிமை, சீதிருத்தம், அன்பு, முன்னேற்றம் முதலிய தனித்தனி 14 தலைப்பின் கீழ் 135 பக்கங்கள் கொண்டதான நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்ட ஒரு அருமையான புத்தகமாகும்.

விலை அணா 10.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

புதுவை முரசு, பத்திரிகாலயம்,
புதுச்சேரி.

இம்பீரியல்பிரஸ் மாயவரம்.

ஆகிய இடங்களில் கிடைக்கும்.

பெண்கள் முன்னேற்றத்தில் கவலைகொண்ட ஆண்களும், சுயமரியாதையிலும் சுதந்திரத்திலும் கவலை கொண்ட பெண்களும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகமாகும்.

பெண் நலன்.

மேற்குறிப்பிட்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வாப்பெற்றோம். இதன் ஆசிரியர் வலம்புரி திரு. ஆவி. சித. சொக்கலிங்கம் அவர்களாகும். இதனில் பெண் அடிமை, பெண் கல்வி, பிள்ளை வளர்ப்பு, உடற் பயிற்சி, நகையணிதல், இளமைமணம், திருமணம், விதவைமணம், ஆண் பெண் சேர்க்கை, பிள்ளைபேறு என பத்து அத்தியாயங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றைப் பற்றியும், நல்ல ஆராய்ச்சி முறையில், இனிய இலக்கியத் தமிழில், நவீன சீர்திருத்த நோக்குடன் மிகவும் தெளிவாக விளக்கியிருப்பதன்றி, பெண் மக்களது உரிமைகள், கல்வியின் அவசியம், விவாக சுதந்திரம், விதவை மணத்தின் அவசியம் முதலியன வற்புறுத்தப் பட்டிருப்பதோடு இது

மை மணம், அதிகமான ஸ்திரீ தனங்களை யணிய ஆர்வங்கொள்ளல்முதலியன கண்டிக்கப் பட்டிருக்கின்றன. டாம்பீகமான செலவுகளும், அர்த்தமற்ற சடங்குகளும் நீக்கப்பட வேண்டுமென விளக்கமாய் கூறப்பட்டிருக்கின்றன.

போலிக் கட்டுப்பாடுகளாலும், சுயநல எண்ணத்தாலும் பெண் மக்கள் இயற்கையாய் அநுபவிக்க வேண்டிய உரிமைகளை மறுத்து அவர்களை சாஸ்வதமான அடிமைகளாக்கி வைத்திருக்கும் கொடுமை ஒழிந்தால்லது சமூகமோ, தேசமோ அல்லது நாடோ விடுதலை பெற்று இன்புற வாழ முடியாதென்பது மறுக்க முடியாத உண்மையாகையால் அத்தகைய சிறந்த பொருளையே நோக்கமாகக் கொண்டு, நவீன சீர்திருத்த முறையில் எழுதப்பட்ட இந்நூலை ஆண், பெண் அனைவரும் படிக்க வேண்டுமென விரும்புகிறோம். ஆசிரியரின் அறிவும், ஆராய்ச்சித்திறனும் போற்றற்குரியதாகும். பெண் மக்களின் முன்னேற்றத்திற்கு இது போன்ற இன்னும் பல நூல்கள் அவசியமென்றே கருதுகின்றோம்.

இதன் விலை அணா. 6.

கிடைக்குமிடம்.

ஆ. வி. சித. சோக்கலிங்கன்,
வலம்புரி.
பொன்னமராவதி P. O

காந்தியும்கைராட்டினமும்.

என்னும் புத்தகம் கைராட்டினத்தைப்பற்றியும் இந்தியக்கைத்தொழில்களியாபாரம்பொருளாதாரம் இயந்திரசாதனம் என்பவைகளைப்பற்றியும் அவ்வப்போது திருவாளர்கள் எஸ். இராமனுதன் ஈ. வெ. இராமசாமி, ஹென்றிஈட்டன் காந்தி, ஜார்ஜ் ஜோசப் டாக்டர், ஜெகதீசன் எம். குமரப்பா எம் எ. ஸ்ரீமதி சிவயோகம் மற்றும் சிலர் ஆங்காங்கு செய்த பிரசங்கங்களும் எழுதிய வியாசங்களுர், மற்றும் 'குடி அரசு'' ''புதுவை முரசு'' ''குமரன்'' ''திராவிடன்'' ஆகியபத்திரிகைகளில் இவ்விஷயங்கள் பற்றி வந்ததலையங்கங்களும் வியாசங்களும், மற்றும் இதுசம்பந்தமான இரண்டொரு மகாநாட்டுத்தீர்மானங்களும், தலைவர் சொற்பொழிவுகளும் ஆகிய வற்றை ஒருங்கே திரட்டி திருவிதாங்கூர் கோட்டாறு சுயமரியாதை வாசகசாலையாரால் வெளியிடப்பட்டபுஸ்தகமாகும், இது கிரவுன் ஒன்றுக்கு ஏட்டு சைசில் (ஸ்மால் பைக்கா) சிறு எழுத்தில் 60 பகங்கள் கொண்டது. இதுவரைக்கிளம்பியுள்ள கதர் சம்பந்தமான அரும் பெரும் ''ஸ்ரீமுகங்களுக்கும்'' பிரச்சனைகளுக்கும்தக்க பதில்கள் அளித்துயந்திரங்களின் தத்துவத்தை விளக்கும் ஒரு அருமையான புத்தகமாகும். இதுபகுத்தறிவு பெறவும்உண்மை அறியவும் விரும்புகின்றஒவ்வொருவரும்வாங்கி பார்த்தாகவேண்டும் என்றே சொல்ல வேண்டும்.

இதன் விலை அணா ஒன்று.

கிடைக்குமிடம்:—

சுயமரியாதை வாசகசாலை,
கோட்டாறு
திருவிதாங்கூர்.

ஆரைக்கீரைத்தைலம்.

திரு. ஈ. எண். வெங்கிட்டசாமியால் அனுப்பப்பட்ட தூத்துக்குடி டாடாஜான் பரிமாசாலையில் தயார் செய்யப்பட்ட ஆரைக்கீரை விதைத்தைலமும், சந்தனித்தைலமும், வாசனை எண்ணெயும் வரப்பெற்று பார்வையிட்டோம். இந்த ஆரைக்கீரை விதைத்தைலமும், சந்தனித் தைலமும் நல்லமூலிகைகளால் தயார் செய்யப்பட்டிருப்பதுடன் மூளைக்குக் குளிர்ச்சி தாக்கூடியதாயும் இருக்கிறது. ஸ்நானம் செய்யவும், தலைவாரிக்கொள்ளவும் இதண்டிற்கும் உபயோகிக்கத்தகுந்ததது.

வாசனை எண்ணெய்.

இது மனோரம்மியமும், இனிமையுள்ள வாசனையோடு கூடியது. தலைவாரிக்கொள்ளவும் தலைக்குத் தடவவும் சாதாரணமாய் உபயோகிக்கத்தகுந்தது.

கிடைக்குமிடம்:—

A N. வேங்கிட்டசாமி,
ஜெனரல் மர்ச்சண்ட்,
234, கிழக்கு மாரட்டு தெரு,
மதுரை.

சிரத்தானந்தர் சரித்திரம்.

மேற்குறிப்பிட்ட பெயருள்ள புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்துளது. மாசினி முதலிய நூல்கள் எழுதிவெளியிட்ட திரு. எம். ஆர். ஜயபுரநாதன் அவர்களே இதன் ஆசிரியராவர். தமிழ் நாடு பத்திராதிபர் திரு. வரதராஜலு அவர்களின் முகவுரையுடன் கூடியது இதின்கண் சிரத்தானந்தசாமிகளின் பிறப்பு, வளர்ப்பு, குழந்தைப் பருவம், கல்வி, ஆரிய சமாஜியானது, தேசத்தொண்டு முதலியனபற்றி மிகவிரிவாகவும், தெளிவாகவும், உதாரணங்கள், கதைகள், உபந்யாசங்கள் முதலியன மூலம் விளக்கப்பட்டிருக்கின்றன. தம்வாழ்நாளை சிட்டுத்திப்பெருமை பெறவிரும்பும் ஒவ்வொருவரும் இத்தகைய தோர் நூலைப்படித்தலவசியமெனக்கருதுகிறோம். 200 பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

கூடன் அண்டு கம்பெனி,
14, பள்ளியப்பன் தெரு,
சௌகார்பேட்டை, சென்னை.

நத்தம் முஸ்லீம்
நேயர் சங்கம், அபிராமம்.
நபிகள் நாயகம்
ஜனன மகோற்சவம்.

அபிராமம் நத்தம்முஸ்லீம் நேயர் சங்கத்தின் ஆதரவில் சென்றமீ 28ந்தேதி இரவு 8மணிக்கு ஷேசங்க ஹாலில் சத்தியத்திரு நபி அவர்களின் திருநாள் மகோற்சவம் மிக விமரிசையாக ஜனாப்யாகூப் கான் பி. ஏ. அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அவ்வைபவத்துக்கு ஏராளமானமுஸ்லீம் கனவான்களும், பலஹிந்து சகோதரர்களும்வந்திருந்தனர். அபிராமம் முஸ்லீம் சங்கண்டரின்கூலின் மாணவர்களும், ஆசிரியர்களும் அபிராமம் யூனைட்டெட் முஸ்லீம் அஸோஸியேவின், முஸ்லீம் மெய்விருத்தி சங்கம், யூனியன் பேவரீட் முஸ்லீம் பைத்தாளர் சொசைட்டி, ராயல் முஸ்லீம் புட்பால் கிளப் முதலிய சங்கங்களின் அங்கத்தினரனைவரும் உள்ளூர் பள்ளிவாசல் டிரஸ்டிகளனைவரும் பல கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டம் மிகுந்த உற்சாகத்துடனே ஆரம்பமாகியது. ஜனாப் வி. மீ. ஷேக் தாவூத அம்பலம் அவர்களும், ஜனாப் எம். கே, எம். முகம்மது இபுராஹிம் சாஹிப் அவர்களும், ஸ்கவுட் மாஷ்டர் ஜனாப் ஷேக் சுலைமான் சாஹிப் அவர்களும் நபிபிரானின் திவ்ய வாழ்க்கையின் சரித்திரத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்கள். காரிய தரிசி விஜயன் எம். அப்துல் கனி அம்பலம் அவர்களால் உலக மத போதகர் என்னும் புத்தகம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. அவைத் தலைவர் முடிவுரை கூறியபின் "உலக மதபோதகர்" என்னும் உயரிய நூலும், நபிகள் நாயகம் அவர்களைப் புகழ்ந்து இச்சங்கத்தாரால் அச்சிடப்பெற்ற வாழ்த்துப் பாசுரப்பிரதிகளும் அனைவருக்கும் வழங்கி சிற்றுண்டி அளிக்கப்பட்டபின் கூட்டம் இரவு 12மணிக்கு இனிதுகலைந்ததென வே சங்கத்தின் அக்கிராசனர் பதி எழுதுகிறார்.

அன்னவாசல்.

மதராஷத்தால் காதிரியா:-இதன் சொந்தக்காரர்களாகிய வா. கா அப்துல் ரஹிமான் ராவுத்தர் அண்டு பிரதர்ஸ் அவர்களின் நன்முயற்சியால் மதுரை மௌல்வி சையத் முகமது அஜரத் அவர்கள் வே மதராஷாவுக்கு 12-8-31 மாலை 4.30 மணிக்கு விஜயம் செய்து ஓர் சொற்பொழிவாற்றினர். அவ்வமயம் சுமார் 500 முஸ்லீம் கனவான்களும் சில இந்து கனவான்களும் விஜயம் செய்திருந்தார்களெனவும், கூட்டம் இரவு 7-30 மணிக்கு இனிது கலந்ததெனவும் ஜனாப். ப. வா. ச காதர் இப்ராஹிம் எழுதுகிறார்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

நிலைமையை மக்கள் ஆராய்ந்து வருவதாலும், மதங்களை ஒழிப்பதே அறிஞர்களின் முதல் கடமையாகும். மதவிஷயங்களில் பிரவேசிக்க மாட்டோம் என்பதும் மனித நல்வாழ்க்கையை அபாட்டை செய்வோர் திட்டமாகும். இத்தனைப் பான்மை முற்றிலும் வெறுக்கத்தக்கது.

மேற்போந்த காரணங்களைக்கொண்டே சோவியத் ரஷ்யாவில் அரசு புரிந்துவரும் தொழிலாளர்மதங்களைப் பரவச்செய்யும் முறைகளை திருத்தி விட்டார்கள். மதங்களில் குழந்தைகள் பழகலாகாதெனவும் திட்டமிட்டுள்ளார். ஆதலின் ரஷ்ய சோவில்கள் அதிவீனர்களும், உன்மத்தர்களும், வயதுகளர்ந்தோறும் எதேச்சமாகப்போகவேண்டிய ஸ்தாபனங்களேயொழிய பெரும்பான்மையோர் போகும் இடமாகாதென முடிவு செய்ப்பட்டுவிட்டன.

உலகம் மதக்கற்பனைகளின்றி பல கோடி வருஷம் நிலைத்துவந்தது. மனிதன் தோன்றி, பேச ஆரம்பித்தும் இந்தக் கற்பனை பேச்சைப் பேச ஆரம்பித்தான். இந்தப் பேச்சால் தான் நிகழ்ந்தன மனிதருக்கு உண்டான கேடுகள் பலவும். மதமில்லா உலகம் இனி வரும் உலகமாகும். மதமில்லாத உலகம் முதலாளிகளுக்கும், அவர் சார்பினர்களுக்கும் வருத்தமாகயிருக்குமேயொழியப் பல கோடி தொழிலாளர் களுக்குஓர் பெருத்த 'சனி'' (உபத்திரவம்) ஒழிந்ததாகும். தொழிலாளரையும். சிருஷ்டிகளையும் வளருது, எமாற்றி அவர்கள சுகவாழ்வைக் கெடுத்துவரும் மதங்கள் இருந்தென்ன? போயென்ன? இதுதான் பொதுவுடைமையில் மதத்தின் நிலைமை.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலெக்டியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு. வெ. ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டுச் சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷ 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
*குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ... 0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ... 0—6—0
* மாதர் சுதந்திரம். ... 0—10—0
* ஆராய்ச்சி அணிகலம் 0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ... 2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி. கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக மூதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

இரத்தமே உயிர்.

திருவாரூர், ஷண்முகானந்த வைத்தியசாலையின் இணையற்ற இரத்தவிர்த்தி மருந்து.

சுவர்ண காந்தம்.

அயம், காந்தம், அப்ரகம், தங்கம், மண்டூரம் 5-ம் சேர்த்தது.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப்பாண்டு, விஷப்பாண்டு, சூதகபாண்டு, நீர்ப்பாண்டு, பித்தவெட்டை, ஐராக்கட்டி, சூதகக்கட்டி, குன்மம், பித்தவாயு, மதமேகம், கூநயம், காசம், கைவீக்கம, கால்வீக்கம், வயறவீக்கம், கிருணி, அதிசாரம், உஷ்ணவாயு, சூதகவாயு, முதலிய அசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி கல்ல இரத்தவிர்த்தியுண்டாகும.

1-நெ. 20 நாள் மருந்து விலை ரூ 10—8—0 வி. பி. வேறு.

டாக்டர் கண்ணுசாமி,
சென்னை மாகாண சித்த வைதிய பிரச்சாரம், திருவாரூர்.

N. B.—குணமில்லாவிடில் டணம் வாபீஸ்,

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நரம்புகளுக்குப் பலத்தைத் தரும். சித்தக் கழப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயித்தில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொப்பன ஸ்கலிதம் இவைகளைக் குணப்படுத்தும்.

1-நெ. ஒரு சேர் ரூ. 4-0-0, அரை சேர் ரூ. 2-0-0
கால் சேர் ரூ. 1-0-0, அரைக்கால் சேர் ரூ. 0-8-0.
2-நெ. ஒரு சேர் ரூ. 3-0-0, அரை சேர் ரூ. 1-8-0,
கால் சேர் ரூ. 0-12-0, அரைக்கால் சேர் ரூ. 0-6-0,

T. A. முடலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.
அக்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வேல்ஸாச்சாமி,
நெ. 616 டத்தோகீராமட் ரோடு, பினாங்கு. S. S.

குவின் மேரி பட்டுப் புடவை.

இது விலை யுயர்ந்த பட்டில் உடல் முழுவதும் 2," 3" அளவுள்ள தங்கச் சரிகைப் புட்டாக்கள் நிறைந்ததும், கரை, முகதலை தங்கச் சரிகையினல் கொடி, செடி வேலைப்பாடுள்ளது. பல அழகிய விருப்பமுள்ள கலர்களில் செய்யப்பட்டது.

18 முழம் X 45" புடவை ஒன்றுக்கு விலை ரூ. 75, 85.

மற்றும் உடல் சாதா கரை, முகதலை சரிகை வேலைப்பாடுள்ளதும், பட்டு வேஷ்டிகள், துப்பட்டாக்கள், பச்சாலாக்கள். சில்க் ஷர்டிங் பீஸ், கோட்டிங் பீஸ் முதலானதுகள் விலை சமமாய்க் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. Raja Ram & Co., Silk Merchants,
38|203, Ramapura, Benares City. (India.)

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.
வியாபாரிகளுக்கு விலை பிரத்தியேகமாய் கொடுக்கப்படும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

R. . Naidu,
86, Ampang St.

M. Ali Saiboo & Co,
27, Java Street

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Booookstore,
122, Pitty street, penang.

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஷண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

தினப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 13—8—0
மாதசந்தா 1—2—0
வெளிநாடு ,, 18—0—0
6 மாதத்திற்கு 10—0—0
ஆசிரியர்: எஸ். முருகப்பா,
மானேஜர், "சண்டமாருதம்"
திருச்சிநுப்பள்ளி.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

குடி அரசு கிடைக்குமிடம்.

திருப்பூர்.

ஆர். கருப்புசாமி,
பல்லடம் ரோடு.

சாத்தூர்.

எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

கொளும்பு.

S. M. மீராமொய்தீன்,
80—பார்க் வீதி.
போர்ட் கொளும்பு


N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட். முசிரி

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பேற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், இல்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடை புண்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. எழைகளுக்குப் பாதிவிலை. பிரயுக்களுக்கு ரேட் வேறு.



இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள்

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ஏத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வேட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்த்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டுத்தமிழ் நாகம்மாளால் வெளியிடப்பட்டது.